உ

கடவுள்துணை.

விறலிவிடு தூது.

இஃது

திருத்தணிகைச்

சரவணப்பெருமாளையரவர்களா

ல் முன்பதிப்பித்தபிரதிக்கிணங்க

திருவாரூர்

தியாகராயசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

காஞ்சீபுரம்

வீராசாமிமுதலியார் குமாரர்

திருவேங்கடமுதலியாரது

இயற்றமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

வி ஷு ௵.

உ

கணபதிதுணை.

விறலிவிடு தூது.

காப்பு.

பொங்குபெருஞ்செல்வப் புகழ்பெரியநாகன்பேர்
துங்கன்விறலிவிடு தூதுக்கு-மங்களஞ்சேர்
பஞ்சவருககங்களைமுற் பைம்பொனெடுங்குன்றிடுகைக்
கஞ்சமலர்க்குஞ்சரமே காப்பு.

விறலிபுகழ்ச்சி.

கார்பூத்தமேனிக் கருணைத்திருநெடுமால்
பார்பூத்தவுந்தி பரந்தாமன்-சீர்பூத்த ௧
வேலைக்குழுறக்கடைந்த வேலைவருந்தெள்ளமுதும்
ஆலைதருவெண்சா றடுபாகும் பாலும் ௨
கனியுஞ்சருக்கரையுங் கற்கண்டுநாவுக்
கினியபசுந்தேனு மிணங்கத்-தனியாக ௩
மத்தித்தெடுத்த மதுரத்துக்கெண்மடங்கு
தித்திப்புக்கேட்போர் செவிக்கேறத்-தத்தைகள்போய்த் ௪
குன்றேறத்தோத்துக் குயின்மாமரந்தோறுஞ்
சென்றேறவாணி சிறுகூரி-நின்றொதுங்கி ௫
விண்ணேறவந்தரத்தில் விஞ்சயரேறக்கணிந்து
பண்ணேறப்பாடுமிசைப் பாடினியே-உண்மையருள் ௬
போதிக்குமெய்த்தவத்தோர் புத்திக்கிடையூரு
னாதிக்குமேழிசைக்கு நாயகமே-தீதக் ௭
கொழுந்தோடிமன்னவராங் குன்றிற்படரக்
கொழுந்தோடிபாடிவரும் கொம்பே-எழுஞ்சிமிழ் ௮
கண்டாரகத்திலொரு காமப்பேயேற்றுவிக்குங்
கண்டாரகத்தில்வல்ல காரியோ-கெண்டைநெடுங் ௯
கண்சுருட்டியோகர் கருத்தறிவெல்லாஞ்சுருட்டி
பண்சுருட்டியாடுமுயிர் பாவையே-ஒண்கிரணக் ௰
காந்தாரங்கொங்கையின்மேற் கைத்தம்புருவணைத்துக்
காந்தாரமேற்றுங் கனிமொழியே-சேந்தவரி ௧௧
யம்பகாம்போதி லணங்குமணங்குமிசை
கும்பகாம்போதிரச கும்பமே-தும்புருதன் ௧௨
பாகரஞ்சித்தளியாள் பட்டுறையிலுட்டயர
மேகரஞ்சிபாடும் விறலியே-லோகத்திற் ௧௩
காகவறிவின்றிக் கலந்தனில்வைத்துண்பாரைத்
தேகியென்பார்க்கீயாத்தீயாரை-ராகமெனும் ௧௪

கள்ளக்கயிறுகொண்டு கட்டியுருட்டிவிழித்
துள்ளுமுனைச்சாட்டைகொடு சுண்டியே-தெள்ளுமிர்தத் ௧௫
தீங்குதலைச்சொல்லாற் றிகிலேற்றித்தேட்டையெல்லாம்
வாங்கிவிடவல்ல மதங்கியே-நீக்கிவெறுப் ௧௬
பானமடவார்க்கு மாடவற்குநல்லசமா
தானநிதானசுவ தாளியே-கானவித்தை ௧௭
பாட்டையெல்லாங்கற்ற பனிமொழியேநான்பட்ட
பாட்டையெல்லாஞ்சற்றே பகரக்கேள்-வேட்டமனை ௧௮

(அவதானிதன்சம்பவந் தொகுத்துரைத்தல்.)

யாட்டியுடன்போட்டிவிளைந் தாட்டிவிட்டபம்பரம்போல்
நாட்டையெல்லாஞ்சுற்றியது நானொருநாள்-கோட்டிதழிப் ௧௯
பூவுடைசான்றென்மதுரைப் புக்கதுவுமங்கேயோ
தேவடியாள்கைக்குள்ளாய்ச் சிக்கியதும்-பாவிகிழ ௨௰
வோரியென்கைப்பொன்னை யுருஞ்சியதும்போல்வாய்த்துச்
சாரிசதிசெய்ததுவும் வைத்ததுவும்-போராடி ௨௧
மேனாகிடவம்பலத்தில் விட்டதுவும்வாய்ப்பகட்டால்
ஊனாவிடப்பற்றியென்னை யோட்டியதும்-பேராசை ௨௨
அங்கேயிழுக்கமன தாகிவழிகொண்டுபுகல்
எங்கேயென்றென்பதூர்க் கேகியதும்-சங்கேந்தும் ௨௩
திம்மராயப்பெருமாள் செஞ்சரணசேகரனை
மும்மதமால்யானைமூர்த் தன்னியனை-ரம்ய ௨௪
கருணாகரனைக் கனயோகவானைப்
பொருநாவலர் பூஷணனை-கூருநிதியைச் ௨௫
சந்த்ரமுகமந்த்ர தளந்த்ரகொலுவிந்திரனைச்
[illegible]ந்தமகுமாரசெய தரனை-முந்து ௨௬
நிலைகேட்டையானை நெடுங்கலியைத்தூரத்
துலைகேட்டுந்தயா துரையை-மலைகோட்டில் ௨௭
ஆளைவைத்துப்பார்க்கு மறுபத்துநாலுமன்னர்
பாளையத்தைவென்ற படையானை-வாளரசர் ௨௮
வெஞ்சமருக்கஞ்சா விருதுவென்றிவாகனைநம்
பெஞ்சாநகர்காக்கும் பெருமானை-வஞ்சகாகோர் ௨௯
சண்டப்பெரும்புலியைச் சாமித்துரோகனைக்காய்
வெண்டயத்தார்சூரியனை வீரியனை-மண்டலிகர் ௩௰
மாகனகங்கப்பமிடும் வாயிலானைபெரிய
நாகமகூளேந்திர நராதிபனை-யோகனையான் ௩௧
பாடியதுமையன்முகம் பார்த்ததுவுமென்கலிவிட்
டோடியதும்பாக்கியம்வந் துற்றதுவும்-நாடியிங்கே ௩௨
நான்வந்ததுவு நடுமதியிலேயிரண்டு
பான்வந்தனையவிழி பாமேகேள்-தானபரன் ௩௩

பாட்டுத்தலைவன்புகழ்ச்சி.

திக்கெல்லாங்கொண்டாடுஞ் செங்கோல்விசையரங்க
சொக்கநாகேந்த்ர துரைராசன்சக்ரபதி ௩௪

சேதுபதிபாண்டியகுல தெக்ஷிணசிங்காசன
நராதிபதிமெச்சு நரபாலன் கோதில் ௩௫

உருப்பான்மைவெண்பிறைமே லூர்வதுதன்கோல
மருப்பாகும்பன்றி மலையான் திரைக்கரத்தில் ௩௬

ஆரமணியாரணி யாரமணிவாரிநடு
வாரியிடுங்குடவ மானதியான்-தார்வேந்தர் ௩௭
வீதிக்குவீதி விவாகமணிமுரசம்
நாதிக்கும்பாண்டிவள நாட்டினான்-ஆதித்தன் ௩௮
தேருரணசெய கோபுரநிலைக்குள்
ஊருமொனுமுன் மொன்பதூரினான் கூறியபோர் ௩௯
வேலைவைக்குஞ்சேங்கருங்கண் மின்னாரிதயவண்டு
மாலைவைக்கும்பூந்தளவ மாலையான்-கோல ௪௰
முகமிலங்குபணியணிந்து முதுகணைந்தகலனைகொண்டு
தகைதவிர்ந்துநடைபிறந்து சமரடர்ந்து பகைவர்தங்கள் ௪௧
தலையினின்றுதிமிதிதிந்தி தகுதிதந்திமியனநடஞ்செய்
துலவிவந்துகனகதண்டை யொலிமிகுந்து-கலகலென்று ௪௨
கொஞ்சிடச்சதங்கையிட்ட கொண்டலொத்திடுந்திறத்த
வெஞ்சினப்பிரசண்டவுக்கிர வெண்பரியான்-விஞ்சுகரம் ௪௩
ஒன்றுபடைத்துவரு மோங்கலுக்கொப்பாயிரண்டு
வென்றிப்புறைசுமந்த மேகமனத்-துன்று ௪௪
மதங்களொனுமூன்று மாரிசிந்தப்பாகர்
ஓதுங்கநால்வாயா லுதறி-நதிர்ந்துபொரும் ௪௫
அஞ்சாருதிரத்தை யாராக்கியோரேழு
மஞ்சார்புனலை மடுத்துறுஞ்சிக்-குஞ்சரங்க ௪௬
ணென்பகோரொட்டு மிணையில்லையென்றகற்றி
ஒன்பதூர்வீதி யுலாவியே-வம்புனைப்போர் ௪௭
பைம்பொன்முடியிடறிப் பத்துநகமுந்தேய்ந்த
கும்பரணகம்பீர குஞ்சரத்தான்-அம்புவியில் ௪௮
காந்துகலியைவெட்டுங் கண்டகோடாரியைப்போல்
எந்துவெள்ளைப்பக்கரையி டாலினான்-சாய்ந்தோடிக் ௪௯
குன்றிக்கருதாற் குடும்பங்குடியேற
முன்றிக்குமுறுமணி மும்முரசான்-னின்றவடி ௫௰
தூக்கினார்சென்னி துடிக்கத்துணைத்துவிடும்
ஆக்கினைசக்கரம்போலாணையான்-பாக்கியவான் ௫௧
கற்பகமாம்பட்டரையுங் கார்கருணையேமணக்கும்
பொற்கமலம்போன்றமனப் பூரணவான்-பற்றலார். ௫௨

தண்டார்மகுடந் தடவுஞ்சயவீர
கண்டாமணிமுழங்குங் காலினான்-மண்டுசமர் ௫௩
யுத்தகளத்தொன்னா ருயிர்பேய்ந்தகுற்றுடைவாள்
தைத்தனைத்துக்கட்டுமருங் காலினான்-கைத்தலத்தில் ௫௪
ஐந்தருவுமைந்துவிர லாக்கித்தருவவெனச்
செந்தமிழ்க்குநல்குமலர்ச் செங்கையான்-பைந்தொடியார் ௫௫
பொன்முலையாங்கோட்டிற் புதுக்கலவைச்சேறாட்டி
மன்மதநூலெழுது மார்பினா-நன்கைதரும் ௫௬
வெற்றிச்சிறுபெண் விளையாடும்சிற்றிலெனச்
சுற்றியகேயூரமணித் தோளினான்-கற்றவராங் ௫௭
கோக்குலத்தைக்காத்தருளுங் கோபாலர்வேயிசைபோல்
வாக்குமதுரம்பொழியும் வாயினான்-நாக்குளிரச் ௫௮
சொல்லிரசங்க டுவர்ப்பென்றுதள்ளியின்பக்
கல்விரசம்பருகுங்காதினான்-வல்ல ௫௯
மருவலரைவெட்டுகின்ற வாள்போன்முகத்திற்
கருணையுலவுமலர்க் கண்ணான் இரவினாடல் ௬௰
சாய்த்தமதிமுகத்துத் தையலார்முத்தமிட
வாய்த்தமுழுமதிபோன் மாமுகத்தான்-காத்தருளும் ௬௧
எம்பிரான்கோயி லேசரடியெந்நாளும்
செம்பொன்முடிதாங்குமலர்ச் சென்னியான்-உம்பர்தொழும் ௬௨
நின்மலனார்வெண்ணீற்று நெற்றிக்கண்காணாத
மன்மதன்காணென்னும் வடிவினான்-தன்னுடைய ௬௩
வல்லக்கவார்குலத்தில் வாள்வேந்தர்கண்குளிரப்
பல்லக்குமேலுலவும் பாக்கியவான்-வில்லேற்றிக் ௬௪
கைக்கொண்டுபொற்படியில் கால்கொண்டுபஞ்சகதி
மெய்க்கொண்டனையபரி மேற்கொண்டு-செய்யரணை ௬௫
துங்கதளகர்த்தர் துரைமக்கள்வாள்பிடித்துச்
சிங்கமெனச்சுற்றி திரண்டுவர-மங்குலெனக் ௬௬
கூனன்முதுகொட்டகமேற் கொட்டுகின்றடம்மாரம்
யானையின்மேற்பேரி யதிர்ந்துவரச்-சேனையொடு ௬௭
தாக்குற்றுமண்டலிகர் தங்களுக்குச்சென்றுசொல்லுங்
கூக்குரல்போல்வீரசின்னங் கொம்பூத-நோக்கும் ௬௮
பரிதிபகைக்குப் பகையெழுந்ததென்ன
கருவிருதுடாலவட்டம் வீசத்-தரளக்கால் ௬௯
வெள்ளைக்கொடியாடை மேகங்கிழித்துவரப்
பிள்ளைப்பிறைபோற் ப்ரகாசிக்க வெள்ளைவெட்டச் ௭௰
சித்ரக்குடைகள் செயமாதுகிட்டநிழன்
முத்துமணிப்பந்தரென மொய்த்துவரக்-கைத்தலத்திற் ௭௧
கத்திபிடித்துவெள்ளி கட்டினதுபாககிகொண்டு
பத்துலக்ஷங்காலாட் படைநடக்கத்-தத்துபரி ௭௨
கொக்குநாயான்கைக் குமரியெனராவுத்தர்
கைக்குளடங்காது காண்மீற-செய்க்கவளம் ௭௩

கூட்டியிரையூட்டியிருகொம்புகற்றிபூட்டிமதம்
மூட்டிவிட்டமால்யானை முன்னடக்கக்-கூட்டமிட்டு ௭௪
வாரிட்டணிவகுத்து வாதிற்றவேற்றரசா
போரிட்டவெங்களத்திற் போயெதிர்த்துநேரார்மேற் ௭௫
கட்டபிரங்கத்தித் தொனியும்பகையுஞ்சூ
விட்டமுகிலு மிடியுமெனப் பட்டயங்கள் ௭௬
வீசுவதுவெட்டுவது மின்னலெனவீரர்சிலை
பூசலம்புமாரிமழை போற்பொழியத் தேசப் ௭௭
பரதளங்கள்பட்டருளபாய்ந்தபெருஞ்செந்நீர்ப்
பிரளயப்பிரவாகம் பெருகச்-சிரதலத்தில் ௭௮
ஆனையிருப்புலக்கை யானையடிக்கவிழு
மூளைநுரைத்திரளாய மொய்த்தோட-வாளாற் ௭௯
படுந்தீரரேறிவரும் பல்லக்குப்பேய்க்கு
விடுந்தோணிபோலு மிதப்பக்-கிடந்துசிலர் ௮௰
வேர்த்துப்பரிசைகொண்டு மேன்மூடிசென்னியொட்டிப்
பார்த்துக்கமடமெனப் பதுங்கப்-போர்த்தலையில் ௮௧
மந்திரவாள்வேந்தர் மகுடத்துதிர்ந்தரத்னம்
இந்திரகோபங்க ளெனச்சிதறச்-செந்தருகண் ௮௨
விந்தைமிடிதீர வெற்றிப்பயிரேற்றி
வந்துகொலுவிருக்கும் வாள்வீரன்-முந்துபெரும் ௮௩
பாதலத்தில்வேரூன்றிப் பாரிற்படர்ந்துவட
பூதரத்திலேறும் புகழினன்-நீதிபரன் ௮௪
சிந்தமகூளேந்த்ரதுரை சிங்காசனாதிபதி
தந்தசௌபாக்கிய சம்பன்னன் செந்துவர்வாய்க் ௮௫
காமவடிவேலவிழியார் கைவலிவெல்லாமெழுதும்
நாமவடிலேற்பெரிய நாகேந்த்ரன்-சேமநிதி ௮௬
பூராதிபன்வாழ்வை யொக்குநவகோடி
நாராயணன்பெரிய நாகேந்த்ரன்-சேடலாம் ௮௭
ஆட்டுக்கூட்டங்களிலோ ராண்புலிபோற்பாயநடு
நாட்டுக்கூழிற்பெரிய நாகேந்த்ரன்-பூட்டுசிலை ௮௮
அம்பொன்றுலீவே ளரசுனக்குவீடாணு
நம்பொன்றமால்பெரிய நாகேந்த்ரன்-ஸ்தம்பமென ௮௯
லோகனுசமப்பதினு லோராயிரமௌலி
நாகம்பொரும்பெரிய நாகேந்ரன்-பாகனுஞ்சொற் ௯௰
பாவுக்கேறிக்கனகப் பல்லக்கேறிப்புலவோர்
நாவுக்கேறும்பெரிய நாகேந்த்ரன்-வாவிதிகழ் ௯௧
பெஞ்சங்கர்வாழப் பெருஞ்சீர்வளர்ந்தோங்கக்
கஞ்சமலர்மாது களிகூற-வஞ்சகமும் ௯௨
பொய்யும்பரந்தோடப் புண்ணியமுந்தண்ணளியும்
மெய்யும்கலந்து விளையாடப்-பெய்யுமழை ௯௩

வானம்வழங்க மனைவாழ்க்கையோங்கவன்ன
தானம்வழங்கத் தவமோங்க-நான்மறைக்கும் ௬௪
நன்னிதியாயேகவண்ண நாதாதிம்மாராயர்திரு
சன்னிதியிற்பூசை தழைத்தோங்க-இன்னிலத்தின் ௬௫
எங்கோனபிஷேக மேந்துமனுவிக்கியானச்
செங்கோலரசு செலுத்துநாள்-சங்கேந்தும் ௬௬

(அவதானிதன்பிறப்பாதிசொல்லல்.)

காரங்கமேனிக் கடவுளிருக்குமந்தச்
சீரங்கத்தேபிறந்தேன் செல்வத்தில்-ஈரைந்தோ ௬௭
டாறுவயதினுக்கு ளாரியமும்வேதமுநா
வேறித்தமிழ்நூ லிலக்கணத்தின்-மீறினேன் ௬௮
வாலசரஸ்வதியென் வாக்கிற்ப்ரசன்னமதா
நாலுகவித்திரமு நானறிந்து-வேலும் ௬௯
மயிலுமெனசொன்னவுரை மாறுமற்சொல்லக்
கயிலாடசிங்கி கழட்ட-அயலொருவன் ௭௰
சொன்னவினுச்சொல்லவெதிர் சூதாடப்பின்முதுகு
தன்னிலெறிந்தகல்லுந் தானெண்ணப்-பன்னுசது ௭௧
ரங்கவிளையாட்டுக் கடிபார்க்கச்சொற்புலவோர்
தங்கள்கவியையவ தானிக்கச்-சங்கத்தில் ௭௨
எட்டெழுத்தாணிக் கேற்றகவிசொல்லவும்யான்
அஷ்டாவதானியென்ப தாயினேன்-மட்டார் ௭௩
திருப்பதியிலேவாசு தேவன்மகளைக்
கருப்புருவவின்பக் கனியை-விருப்பமுள்ள ௭௪
பூங்காவனத்தைப் பொருத்தமுடன்வேட்டுப்
பாங்கானவாழ்விற் பயிலுநாள் ஆங்குசெல்வந் ௭௫
தீசர்திருச்சன்னிதியிலேந்திழையார் தம்மிலொரு
தாசிமேல்வைத்தேன்நயவுநான் நேசமாய் ௭௬
இந்தாங்கத்தேதிரிந்தேனின்பரசவல்லியிடத்
தந்தரங்கத்தேதிரிந்தேனுசையால்-அந்தத் ௭௭
திருச்சிராப்பள்ளிக்குச்செல்லாதிருக்கத்
தரிச்சிராதென்மனது தானும்-ஒருத்தன் ௭௮
அறியாச்சிறுவனுடன்யானொருநாளந்த
வெறியார்குழற்பரத்தைவீட்டிற்-பிரியமுடன் ௭௯
சென்றிருந்துவந்தேன்திடுதிடெனவோடிப்போய்
குன்றிருந்தகொங்கைக் குலமனையாள்-தன்கணவர் ௮௰
ஓடத்திலேறினு ருத்தரியம்போக்கடித்தார்
நாட்டிச்சிரகிரியை நண்ணினுர்-கூடவந்த ௮௰௧
என்னைச்சவுக்கையில்வைத் தின்பரசவல்லியென்
பொன்னனையாள்வீட்டுக்குப் போய்புகுந்தார்-அந்நேரம் ௮௰௨
மிஞ்சிமிஞ்சிப்பேசினுள் வேசிமகளதற்குள்
அஞ்சிஅஞ்சிபேசுனு ளய்யங்கார்-வஞ்சியந்த ௮௰௩

வீட்டுக்கதவடைத்தான்மெள்ளமெள்ளகொஞ்சினான்
காட்டுப்புறாவோசைகாட்டினான்-வீட்டைவிட்டு ௱௰௪
வந்தாரம்மையபொன்னைவாவென்றாற்காவிரியிற்
சந்திபண்ணியிக்கரையிற்றாண்டினார்-இந்தவூர்க் ௱௰௫
கென்மார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னானொன்றந்தத்
துன்மார்க்கமையலெல்லாஞ்சொல்லிவிட்டான்-மன்மம் ௱௰௬
தொடுத்தாள்கடுத்தாள் தூங்குமஞ்சம்விட்டுப்
படுத்தாள்பகைஞனைப்போற்பார்த்தாள்-அடுத்தடுத்து ௱௰௭
வேண்டினேன்குட்டுவெளியாக்குவேனென்னைத்
தீண்டாதேயென்றாள்சிராப்பளியில் ஆண்டவன்பாற் ௱௰௮
செல்லாயென்றாள்பரத்தை தேடுவாளேயென்றாள்
சொல்லாதவார்த்தைசிலசொல்லினாள்-இல்லாள் ௱௰௯
வலிகிடந்தமாற்ற முனைக்குமேலவ்வில்
புலிகிடந்தூறாய்விடுமென்-றுலகறியச் ௱௨௰

(யாத்திரைசெய்தமைகூறல்.)

செப்பினாளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே
தப்பினேன்கைக்கடங்கத்தக்கதுகொண்-டப்பால் ௧௨௧
அதிசயங்களானதலம்யாவுமறிவோம்
நதிகள்பலமூழ்குவோநாமென்-றிதயமாய் ௧௨௨
வெள்ளைநாவற்பழுக்குமிக்கப்பதியுமரிகள்
துள்ளுபரியானதொருதொன்னகரும்-தெள்ளுமிதன் ௧௨௩
செப்பக்கதவு திறந்தவூருங்கருங்கல்
கப்பலெனவந்தகடற்பதியும் இப்புறத்தில் ௧௨௪
பாங்குடையவாண்டு பனிரண்டுகோர்கான்மா
மாங்கனீர்பொங்கும்வளப்பதியும் பூங்குடத்தில் ௧௨௫
அங்கத்தைமங்கைவடி வாக்கினவூருந்தமிழ்க்குத்
தங்கத்தையீந்ததளியூரும்-செங்கருட்கட் ௧௨௬
காகமெரியக் கனல்வீசுமாமலையும்
யோகங்கழுகுசெயுமொண்கிரியும்-வேகமிக்க ௧௨௭
காண்றாண்டுவெம்முதலை கௌவியுண்டபிள்ளைதனை
மூன்றாண்டுசென்றழைத்தமூதூரும்-மான்றானோர் ௧௨௮
தாசிக்கெழுந்த தனத்தைலிங்கமென்றொருவன்
பூசித்துப்பேறுபெற்ற பொன்னகரும்-நேசித்து ௧௨௯
மைந்தனுடலறிந்து மாதவத்தோர்க்கிட்டுவினைப்
பந்தபரிந்தோன்பழம்பதியும்-சோர்தமாம் ௧௩௰
ஆட்டைப்புலிக்காக்கு மம்பலமுநாலுவசி
நாட்டிநடுக்குத்திக்குநன்னகரும் காட்டெயினன் ௧௩௧
கண்ணைப்பறிகொடுத்தாற் பதியுங்கண்ணான்றன்
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும்-மண்ணுலகில் ௧௩௨
தீண்டாதாமொச்சில் செழுமறையோர்க்கீந்தாலும்
வேண்டாமெனுதெற்குப்பெய்ப்பதியும் மாண்டவர்தங் ௧௩௩

காதிலுபதேசங் கடவுள்சொலும்பதியும்
சிதரன்மாயாபுரியுஞ்சேவித்து-நாலுதிக்குஞ் ௧௩௪
சங்கமுகந்துங்கேரி தரங்கமுககங்கையுடன்
சங்கமுகந்தீர்த்தமெல்லாந்தானாடி-அங்கிருந்து ௧௩௫
கங்குல்பகலாககடலோட்டக்கப்பலிலோர்
திங்களில்வந்தெய்திடனன்சேறுவின்னி-மாங்காத் ௧௩௬
தனுக்கோடிதர்ப்ப சயனம்பணிந்து
மனுசகோடிசூழ்செந்தூர்வந்தேன்-கனத்த ௧௩௭
திருப்பதிகளொன்பதுநான் சேவித்தங்குள்ள
அருட்பொலியுர்தீர்த்தமெல்லாமாடித்-தருப்பொலியும் ௧௩௮
குற்றாலநெல்வேலி கோதைவில்லிபுத்தூர்வந்
துற்றேன்றிருச்சுழிகையூர்பணிந்தேன் நெற்றிவிழிக் ௧௩௯
தம்பிரான்பூவணத்தைச சந்தித்தேன்சங்கேந்தும்
எம்பிரானசோலைமலைக்கெய்தினேன்-பைம்பொற் ௧௪௰
றலையருவியாடியெங்கள சங்கத்தழகர்
மலரடியைப்போற்றி மகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை ௧௪௧
யானதிறலஞ்சுநா ளங்கிருந்தேனங்கையோர்
ஞானியையன்றன்னுடனேநட்பானேன்-மேன்மையிர் ௧௪௨
சொக்கர்மதுரைதொழுதுவரவேநீரும்
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தே-தக்கோன் ௧௪௩
நகைத்தானிவ்வண்ண நடந்தகதையுண்டு
தொகுத்தமறைவேதியரே சொல்வேன்மிகுத்தபுகழ் ௧௪௪

ஞானியார்நல்வழியுரைத்தமைகூறல்.

மேவிச்சிறந்ததொர் திவேர்தனொற்றியூர்த்திருநாள்
சேவிக்கப்போகமனஞ்சிந்தித்தான்-தாவில ௧௪௫
அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி
உமைச்சதிசெய்வாளென்றுரைத்தான் அமைச்சனுரை ௧௪௬
மிஞ்சிநடந்தான்வேசைகைக்குட்சிக்கினன்
வஞ்சிமருந்தான்மதிகெட்டான்-குஞ்சரமும் ௧௪௭
நாடுநகரநவநிதியும்வாங்கினாள்
ஓடுங்குழையுமாவோட்டினாள்-ஆடுகின்ற ௧௪௮
கூத்தாடிகள்வன்போற்கோலம்பூண்டாடுவதைப்
பார்த்தீரிலையோசொற்பாவலீர்-வாய்த்த ௧௪௯
கதைகண்டர்தென்மதுரைகாணவென்றாலாங்கோர்
தொறட்டுண்டதனையான்சொல்வேன்-பொறுத்தகசம் ௧௫௰

மதனபிஷேகத்தின்பிறப்புணர்தல்.

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்குத்
தட்டதெடுக்குந்தழியிலாள்-வட்டமுலை ௧௫௧
மாணிக்கமாலையெனுமங்கையொருபெண்ணடிதன்
காணிக்குத்தேடக்கருத்தாகி ஊனோத் ௧௫௨
தறைமெழுகியுண்டு தவங்கிடந்துமெத்தக்

துறைகளெனக்குறிகள்கேட்டும்-பெறுவதற்குச் ௧௫௩
செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுத்திலிட்டும்
கெர்ப்பத்துக்காமருந்துகிண்டியுண்டும்-தப்பாத் ௧௫௪
திருவணர்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம்
மருவணந்தாந்தனங்கள்வைத்தும்-திரையுடலை ௧௫௫
வேற்றொருவர்கண்டுவிரும்பாதநாள்தாழை
காற்றலிக்கப்பூத்தகதைபோலச்-சாற்றும் ௧௫௬
ஆரிவைதெரிவைகடந்தப்பானடக்கும்
பருவத்தேகர்ப்பம்படைத்தாள்-நரைவீழ் ௧௫௭
தலையிற்கறுப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு
முலையிற்கறுப்புமுதிரக் கலக ௧௫௮
விழிவேல்குழியமுகம்வெண்மதிமயமாக
எழில்மேனிபச்சைநரம்பெய்தத்-தழைதருஞ்சூல் ௧௫௯
கொண்டைவயிறுபெருஞ்சைக்கூளேந்த்ரன்சத்திரத்தில்
உண்டுவருவோர்வயிற்றையொப்பாகத்-தண்டே ௧௬௰
அளிக்குடிக்குத்தாரா ளரும்புளியங்காய்க்கும்
புளிக்குடிக்குமுன்ன மிச்சைபூண்டாள்-களிக்கவயிற் ௧௬௧
றடித்தரித்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப்
போடுவதைதான்வாயிற்போட்டறிந்தாள்-கூடிவந்த ௧௬௨
மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றாளவ்
வேதனையான்மூர்ச்சையாய்மெய்சோர்ந்தாள்-தாதிமார் ௧௬௩
பெண்ணென்றார்காதிற்பிழிந்தமருந்ததுபோல்
துண்ணென்றழுந்துதுயர்தீர்த்தாள் வண்ணமணிப் ௧௬௪
பொற்றொடிக்கைமங்கைநல்லாள் பொன்காய்க்கும்பூடொன்று
பெற்றதுபோலீன்றெடுத்தபெண்கொடியை-மற்றாளாள் ௧௬௫

மதனாபிஷேகத்தின்வளர்ப்புணர்த்தல்.

ஏந்தியிருகையா லெடுத்துநறுநீராட்டிப்
பூந்துகிலான்மெய்துவட்டப்போட்டினர்-வாய்ந்தசங்கிற் ௧௬௬
சேனையுடன்வஞ்சத்திருட்டுமருட்டுமவ
தானப்புரட்டுந்தனம்பறிக்க மானிடர்க்குச் ௧௬௭
செய்யுங்கபடமகாதித்திரிப்புமாகாசப்
பொய்யுங்கலந்துபுகட்டினள் செய்யபசுந் ௧௬௮
தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே
மானேயென்கண்ணேமரகதமே-நானீன்ற ௧௬௯
பொன்னேயெனவெடுத்துப்பொற்குரங்கின்மீதேற்றி
மின்னேரிடையாள்விழிபாப்பு நன்னுதலிற் ௧௭௰
பாப்பிட்டசொல்லிவெள்ளிப் பட்டமெனவெண்ணீற்றுக்
காப்பிட்டாசிற்றடிக்குங்காப்பிட்டாள்-சேப்பிட்ட ௧௭௧
செய்க்குழைக்கண்மயிலேசெம்பொனுள்ளபேர்களையின்
கைக்குள்வளையென்றுவளைக்கைக்கிட்டாள்-சிக்காப்புள ௧௭௨
ஒட்டுகருளாவதுபோலுள்ளபணக்காரர்களுடன்
பொட்டுக்குளாவென்றுபொட்டிட்டாள் பொட்டெனவே ௧௭௩

வேர்த்தபுதையல்வெளியாக்குமஞ்சனம்போல்
வாய்த்தவடிவேல்விளிக்குமையிட்டாள் காத்திரமக ௧௭௪
வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள்
கன்னத்திலமீதேகரிக்கட்டாள் சொன்னதனம் ௧௭௫
வீட்டிடபயண்டைமுதன்மேமேலறக்தன்குழம்பம்
ஈட்டறப்பொற்றொட்டிலேற்றினாள்-தேடியுன்பால்
வாராதவாரார்வந்துமடிச்சிலைகொட்டித் ௧௭௬
தாராதவரார்தந்தணையிற்-சேராதார்
ஆராராச்சேர்க்துணக்குள்ளாசைகொண்டெசுற்றுக்குச்
ஆராராவென்றுதாலாட்டினாள்-தாராட்டிச் ௧௭௭
சீராட்டிமுன்னிருக்கிச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச
ணீராட்டியந்திலோக்காட்டிப் பாரிற் ௧௭௮
இளைப்பெரியநாகேந்திரன்கீர்த்தியைச்சொல்வாணர்
வளர்ப்பதுபொற்பெண்ணைவளர்த்தாள்-முலைக்குமகள்
தள்ளிநடந்தாளதுகண்டுதாய்மிறலி ௧௮௰
துள்ளிநடந்தாளதுயர்தீர்ந்தாள் பிள்ளையொரு
சிற்றுடைக்கட்டிக்தெருவில்வரக்கண்டுதிட்டி ௧௮௧
சுற்றுமலேதிட்டிசுற்றினாள்-மற்றுமந்த
வம்பிமகண்மழலைவார்த்தைதனைக்கேட்டாடவனைத் ௧௮௨
தம்பியென்றுசொல்லத்தலைப்பட்டாள்-அம்புயக்
கைக்குவளையிட்டுக்கடகம்பவளமிட்டு
தக்கையிட்டகாதிற்றளப்பமிட்டுப்பக்கத்திற் ௧௮௩
கொண்டையிட்டுக்குப்பியிட்டுக்கொப்பிட்டுக்காலில்வெள்ளித்
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-தெண்டரள ௧௮௪
மாலையிட்டிரட்டையாணைநாண்மருங்கிலிட்டு
வேலையிட்டசுட்டிநெற்றிமேலிட்டுக்-கோலசசிங் ௧௮௫
தாக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்களிட்டுவச்சிர
மூக்குத்தனக்கிட்டுமுக்கமிட்டு நாக்குளிர ௧௮௬
வாரிட்டகொங்கைமதனபிஷேகமெனப்
பேரிட்டுலகறியப்பேச்சிட்டாள்-ஆரியமும் ௧௮௭
கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும்
பன்னுதமிழும்படிப்பித்தாள் மன்மதவேள் ௧௮௮

பருவக்குறித்தாய் கண்டமையுணர்த்தல்.

சிற்பரசவல்குற்சிறியாள்வயதேழில்
நற்பரதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம் ௧௮௯
மோனவித்தையுள்ளமுனிவோர்களுமயக்குங்
கானவித்தையெல்லாங்கனாகண்டாள் மேனிக்குள் ௧௯௰
வாடைமஞ்சள்பூசுவதுமல்லிகைப்பூச்சூடுவதும்
ஆடவரைவீட்டுக்கழைப்பதுவும் ஓடிப் ௧௯௧
பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்தக்
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்கொங்கைத் தலைக்கருப்பை ௧௯௨

முந்திகொண்டுவெட்கம்போன்மூடுவதுங்காமுரனை
ஆந்தமட்டும்வைத்துவிளையாடுவதும்-சந்தவரை ௧௯௪
வாள்வீச்சுபோலவரிவிழியால்வெட்டுவதும்
மேல்வாய்ச்சிகண்டுடம்புபூரித்தா ளேவனையார் ௧௯௫
கைக்குள்வசமாகிவந்துகாலைப்பிடிக்குமந்தச்
சொக்குப்பொடிமருந்துசொல்லிவிட்டாள்-சொக்கர்புது ௧௯௬
மண்டபத்தின்முன்னே வசந்தன்திருநாளில்
எண்டிசையோர்மெச்சவரக்கேற்றினள்-ஒண்டொடுக்குச் ௧௯௭
சின்னச்சிமிழாகிச் செப்பாகித்தேங்காயாய்
வன்னத்தனங்கள் தளர்ந்தேறக்-கன்னிகையாள் ௧௯௮
தன்னையறிந்தாள்தழியிளாள்தன்பழம்
பொன்னையொருபக்கம்புதைத்துவைத்தாள் மன்னவர்கள் ௧௯௯
சுற்றுவதுங்காமுகனைத்தோயமகட்குமனம்
பற்றுவதுங்கண்டறிந்தாள்பப்பரத்தி பெற்றெடுத்த ௨௱

தாய்க்கிழவி போதிப்புணர்த்தல்.

மானேயென்கண்ணே மயிலேகுயிலே
தேனேமதனபிஷேகமே-மீனின்ற ௨௦௧
குஞ்சுக்குநீச்சுங்கொடும்பாம்பின்குட்டிக்கு
நஞ்சுங்கொடுத்தவராநங்கையே-செஞ்சிலைக்கச் ௨௦௨
சீவகனுக்கன்றொருபெண்சிங்கமொருகன்றீனும்
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில் ஓவியமாக் ௨௱௩
காரானையொன்றெழுதிக்காட்டவரிக்கன்று
பேராடிப்பாய்ந்தகதைபொய்யலவே-யாருக்கும் ௨௱௪
சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர்
போதிக்கவேண்டுமோபொற்கொடியே மாதற்குள் ௨௱௫
உன்புத்திஎன்புத்திக்கோவிரட்டயாகிலுமென்
தன்புத்தியுமகளேசற்றேகேள்-ஒன்பதூர்க் ௨௱௬
கொஞ்சிபரிநகுலன்கூளேந்திரன்பன்றிமலை
மஞ்சட்குளியமறவாதே-மஞ்சண் ௨௱௭
மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின்
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம்-இணங்கியபொன் ௨௱௮
னுத்தரியஞ்சற்றேயொருபாற்றெரியவிட்டு
குத்துமுலைச்செம்பொற்குடங்காட்டி முத்துநகை ௨௱௯
காட்டிவகைகாட்டிநகைகாட்டியிடைகாட்டிநயம்
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாய்-கோட்டுமுலை ௨௱௰
சாய்த்தான்முகந்திறைந்தாற்சல்லிக்காசொன்றுமுனக்
கீந்தாதரிப்பவராரோ்திழையே-ஆய்ந்தபஞ்சுப் ௨௰௧
பொட்டிபோலேநரைத்தபெண்கள்கையிலென்னவருஞ்
சட்டிசுறண்டவருந்தையிலே-கட்டழகன் ௨௧௨
வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொறகட்டால்
வேஷியிட்டுகட்டலாம்வீடெல்லாம்-காலைப் ௨௧௩

பிடிப்பார்முழுப்புரட்டும் பேசிவிலைகீறி
மடிப்பார்தருவார்வருவார் படிக்கவிதம் ௨௧௪
காட்டுவேனென்பாரக் கள்ளவண்டர்தங்களையுன்
வீட்டிலழையாதேயெல்லியமே-வீட்டில்வந்து ௨௧௫
பாயப்பகட்டுவிதம் பண்ணுவார்க்குப்புழுதி
வாயிற்புகட்டுமயல்பூட்டு-நீயொருத்தர்க் ௨௧௬
காசைவைத்தார்பின்னெறுத்த சண்டாருடனொத்த
வேசையர்க்கெல்லாகைப்பாமெல்லியமே-காசுபணம் ௨௧௭
குப்பல்குப்பலாகக் குவித்தாலும்வாலிபத்தில்
வைப்பிருக்கசற்றுமனம்வையாதே செப்பு ௨௧௮
முலையைக்கசக்கிவிட்டு முட்டாள்சரசத்
தலையைவிடும்பேரையழையாதே சிலைநுதலாய் ௨௧௯
முன்பின்னறியார் முடிப்பாகப்பொன்னெழுநூற்
றென்பதுதந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன் ௨௨௰
கூடுவார்நித்திரைநீ கொள்வதும்பார்த்துப்பொடியைப்
போடுவார்சேலைவர்க்கம் பொன்னுடைமைசோடினையாச் ௨௨௧
சேரச்சுருட்டியப்பாற் செல்வார்விடிந்ததற்பின்
யாரைப்போய்க்கேட்பதுநா மாரணங்கே-ஊரிலே ௨௨௨
தந்தைகீழ்ப்பிள்ளையுண்டு தாய்க்கீழ்ச்சிறுவருண்டு
வந்தால்மறையவரசசொல்லி-தந்தமதின் ௨௨௩
வாயில்வடுச்செய்யாமல் மார்பினகம்வையாமல்
தோயுமிதங்காட்டிச்சுகங்காட்டு-சேயிழையே ௨௨௪
ஆந்திபட்டணய மஸ்தரொக்கமாகவந்தால்
சொந்தமுள்ளபேர்தமக்குச்சொல்லியே முந்திவந்து ௨௨௫
சாரமுண்வாய்நீயவன்பின் சக்கையத்தின்பானென்முன்
னோரமழைத்தனுப்புநேசமாய்த்-தூரத் ௨௨௬
திரிந்துவந்துகூடிவிட்டு தேகுவார்தம்மேல்
பரிந்தாசைபோற்புறகேபற்றிப் பிரிந்திருக்க ௨௨௭
மாட்டேனேயுன்னைமேலே மாப்பிள்ளைமாராசையெல்லாம்
போட்டேனேஎன்னபொடி போட்டாய்நீவீட்டில் ௨௨௮
தனித்திருக்கப்போமோடா சாமியுன்றன்பால்
இனித்திருக்குந்தாடா விருடா-சனிக்கிழமைக் ௨௨௯
சப்பாலோநீவருவா யானையிடுமுக்காலும்
தப்பாதேயென்றனுப்புதார்குழலேமைப்பொருங்கண் ௨௩௰
மாதுநல்லாய்வேறு மருந்தேனவர்திரும்பும்
போதுவருமேபுதையலெல்லாம்-காதல்கொண்ட ௨௩௧
மன்னவரைத்தாங்குசப்ர மஞ்சத்தின்மீதிருத்தி
பொன்னலைக்கேளாமற்புல்லினால் பின்னரசே ௨௩௨
பட்க்குந்தசவிகைகம்மோடொத்தவாக்குபெண்ணிக்கை
யார்க்குங்கனத்தகுடியாகலாம் பார்க்குள்ளே ௨௩௩
புல்லுவிற்றங்கிளைவிற்றும் பொன்கொடுப்பார்காணமக்குக்
கொல்லமலைப்பாவாய்குலதெய்வம்-பல்லிழுக்க ௨௩௪

கூளர்க்கிழவன்கொடுக்கும்பணயமதில்
நாணக்குழலேநேருண்டோ-மானமின்றி ௨௩௫
அப்பன்வருவா னதன்பின்மகன்வருவான்
தப்புமுறையென்றுந்தள்ளாதே இப்புவியில் ௨௩௬
மாலக்குளியர்வெகு மாமாயக்கள்ளர்தங்கள்
சோலிக்கும்போகாதேதோகையே-வேலையின்றித் ௨௩௭
தத்தையனையாரைத் தழுவிப்பணம்பறிக்கும்
எத்தைநாமெத்துவதுமெத்துகாண-சித்ர ௨௩௮
கதையைக்கேளென்பருவககாலத்திலிந்தப்
பதியிலோர்க்குச்சிலியப்பையல்-மதுரை ௨௩௯
மழுங்குணியென்னும்பேரான் மாதர்தனத்தைத்
தழுவிப்பறிப்பான்தனத்தை-முழுதும் ௨௪௰
கிழக்குதெருவிளெட்டைக்கிஷ்ணசிவீட்டைக்
குளப்பரியாகப்பாரித்தான்கூடி-முளைத்தெழுந்த ௨௪௧
செப்புமுலைமாதே சிவிலிபுத்தூர்தாசிக்
குப்புடமையெல்லாங்கொள்ளைகொண்டான்-வைப்பென்று ௨௪௨
தந்திரமாகப்பசப்பித் தஞ்சாவூர்செல்லிதனைக்
கந்தைபொருத்தவிட்டான் கைம்மருந்தால்-இந்தவகை ௨௪௩
ஆங்கவனுக்கேகொடுத்தா ரல்லாதவன்பொருளை
வாங்கினபேரில்லையென்மேலாகிஈங்குவந்தான் ௨௪௪
குன்றுமுலையாய் கொழுத்தகுட்டியகப்பட்ட
வென்றுபூரித்தேதனிருதோளும் அன்றுமுதல் ௨௪௫
மாட்டிப்பறங்கிக்காய் மாதேதினங்கறியாக்
கூட்டிக்கொண்டாங்கவனைக்கூட்டியே-வீட்டில்வந்த ௨௪௬
நாலாநாளல்லினடுச்சாமஞ்சோதித்துக்
காலிற்றொடுசெருப்புக்கட்டியே-மேலெல்லாம் ௨௪௭
வெண்ணீறுபூசியைந்து வீரசடைபின்னிட்டுப்
பெண்ணிலியென்றுகண்டோர் பின்வாங்க-பண்ணமின்றி ௨௪௮
கள்ளுஞ்சோறுங்கைச் சுரிகையுமாய்ப்போய்க்கழுவிற்
கள்ளன்வலதுகுதிக்கான ரம்பில்-மெள்ள ௨௪௯
விளக்கெரித்துநெய்வடித்து வீட்டில்வந்துநன்றாய்
உழக்கரிசிபெய்நாரவைத்துப்-புளிப்பில்லாச் ௨௫௰

சாற்றிடும்பாழ்கும்பிற் சற்சனையிற்கூட்டியிட்டுஞ்
சோற்றிலிட்டுநெஞ்சைக் சுழலவிட்டு வேற்றவனு ௨௫௧

பாயத்தாற்றேடும் பணப்புற்றிலேகரடி
வாயைவைத்தாற்போலுறுஞ்சி வாங்கிவிட்டேன்-பேய்போல ௨௫௨

கையிலுள்ளதெல்லாம்போய்க சுப்பனையொன்றேந்தியதோ
தெய்வமேயென்று திரிகிறான்-நொய்யரிசி ௨௫௩

நாளுக்குநாள்செலவா னங்காயுனக்குவரும்
ஆளுக்கிருக்குதின்ன மாழாக்கு-வாள்விழியாய் ௨௫௪

வேடிக்கையாய்மாசி வீதியிலேநாமுலவ
ஆடிக்கிமுன்னேயென் னுசையெனத்-தேடுநிதி ௨௫௫

யுள்ளவனைமெள்ள வுபாயமாய்க்கூட்டிப்போய்க்
கொள்ளும்பவளமுத்து கோவைவடம்-உள்ள ௨௫௬

கடையுஞ்சவுளிக் கடையும்பார்த்தையா
கிடையாச்சரக்குக் கிடைத்ததடைவாயேன் ௨௫௭

னுத்தண்டமாலையைக்கா தோலையைப்பொன்மோதிரத்தை
வைத்தென்றாலுங்கடுக வாங்கித்தா-பத்தஞ்சு ௨௫௮

வட்டிசுமந்தாலுமப்பால் வாங்கலாமென்பாயங்
கொட்டனுக்குநெஞ்சுருக்கென்னும்பொட்டெனத்தன் ௨௫௯

கைத்தனத்தையீவான் கடையிலேயுள்ளசரக்
கத்தனையும்வாங்கி யறையிலிடுவைத்து ௨௬௰

மருந்திடுப்பிற்கட்டி வருவார்சிலர்மேல்
இருந் துடும்பைவாட்டி யெடுப்பார்-பரிந்தணைத்து ௨௬௧

கைச்சரசம்போற்றடவிக் கண்டுபிடித்துடனே
பிச்சப்பிடிங்கியெறி பெண்ணணங்கே-லச்சையுற ௨௬௨

மன்மதநூலைப்படித்த வம்பனையென்னுணையுன்றன்
சென்மசென்மமுள்ளமட்டுஞ் சேராதே-சன்யாச ௨௬௩

ருத்திராக்ஷப்பூனை ரூபர்சிலருண்டுவந்தால்
மெத்தையிலேவைத்து விளக்கணைத்துசசத்தமின்றிக் ௨௬௪

கூடையிலேயாள்வந்து கூப்பிட்டாளையர்தம்மைக்
கூடையிலேமூடிவைத்து கூப்பிடுநீபாடிக் ௨௬௫

கடுக்கனைலக்குங் கவிப்புலவர்வந்தால்
துடுக்காயொருவார்த்தை சொல்வாய்-கொடுக்கவென்றால் ௨௬௬

ஐந்துபொன்வாங்கா ரனைப்பணமேபோதுமென்பார்
சிந்தையவ மகிழச் செய்திட்டால்-நந்தம் ௨௬௭

இசைபாடுவார்கூடா தென்றாற்கொடிய
வசைபாடுவார்கெட்டுமே வாழ்விலுதையவுளம் ௨௬௮

அஞ்சுகின்றகச்சேரி யாட்சேவகர்வந்தால்
வஞ்சியவரீந்ததைநீ வாங்கிக்கொள்- கொஞ்சமென ௨௬௯
எண்ணாதேகைமுதல்மற் றென்னபேர்மோர்செம்பு
தண்ணீர்போம்நாமிடும்பொய்ச் சத்தியம்போம்பெண்ணணங்கே. ()
வாவென்றழைப்பார் மணியப்பிலுக்கர்சும்மா
போவென்றுசொன்னாலும் பொல்லாப்பாவையே ௨௭௧
தாசனையாச்சேலையிலே தம்பலத்தின்சாருமிழ்ந்து
சூதகமானேனென்று தூரவிரு-மாதவிடா ௨௭௨
யானநாளிற்பணையமஸ்தொக்கங்காணிலொரு
பானைவென்னீர்க்காகவெண்ணிப் பாராதே-நானுன்மேல் ௨௭௩
மோகமுற்றேனீயென்மேல் மோகமில்லையென்றுசிலர்
தோகைநல்லாயுன்கருத்தைச் சோதிப்பார்-ஓகோநீர் ௨௭௪
என்னமாச்சொல்வந்தீ ரென்னாசையும்மேலென்
றன்னமேயென்றலைதொட் டாணையொடு-சொன்னவந்தப் ௨௭௫
பொய்யாணையாய்சீவன் போகுமோபாரெனக்குத்
தையலவ்வாணை தயிர்ச்சாதம்கையில் ௨௭௬
இருட்டினிற்செல்லாப்பணத்தை யீந்துபடுத்துக்
கருக்கடிலேபோவாரெக் காட்டித்-தரச்சொல்லு ௨௭௭
வாயமட்டாப்பேசினால் மானேமுசலின்மேல்
நாயைவிட்டாற்போலெழும்பிரம்மைவிடு-கோயிலுக்குள் ௨௭௮
நம்பியாரையனுட னானுண்டுநம்பியார்
தம்பியாரைக்கூடிச் சஞ்சரிநீ-அம்பெனுங்கண் ௨௭௯
மைவிஸ்தாரக்குயிலே வாய்விஸ்தாரக்காரன்
கைவிஸ்தாரக்காரன் கையைவிடு-செய்யுமறைக் ௨௮௰
கட்டளையார்வந்தாலுன் கைம்மருந்தாலேயறிவைத்
தட்டழியப்பண்ணித் தனம்பறிநீ-அட்டிலிலே ௨௮௧
சோறுசமைக்குஞ் சுயம்பாகிவந்தாக்கால்
வேறுமொருவேளாண்மை வேண்டுமோ-சாறும் ௨௮௨
பருப்படியுச்சம்பாவும் பாற்குழம்புநெய்யும்
வரும்படிந்தக்கட்டளையாய் மானே-தரும்பொருளை ௨௮௩
வெம்பளிக்கைபண்ணாதே லெஞ்சினப்பண்டாரிவந்தா
லும்பளிக்கையூர்வரத்தை யொக்குமே- சம்பளத்தைக் ௨௮௪
கூட்டிச்சுமத்திவைப்பான் கோயிற்கணக்கனொரு
வேட்டுப்போட்டுப்போக வீட்டிலழை-ஆட்டுவிக்க ௨௮௫
கால்பிடித்தநட்டுவனார் கையைப்பிடித்தழைத்தால்
வேல்படைத்தகண்மயிலே மேவிவிடு-சாலநெடு ௨௮௬
நேரஞ்செல்லாமநெடுங்குடைசைக்காரனைமுன்
நேரமழைத்தனுப்பு நேசமாய்ச்-சாரமுள்ள ௨௮௭

நாடகத்துப்பாங்கு நமக்குட்டத்துவிக்கும்
பாடகனையுந்தனது பண்ணிக்கொள்-கூடுதித்திக் ௨௮௮

காரனையுங்கைத்தாளக் காரனையுமெக்காளக்
காரனையுங்கூடியிதந கட்டாதே - தாறு ௨௮௯

தலையராய்க்கைத்தாழைத் தம்பியராற்பிறற்
கலையராயுன்னழைக்கக் கண்டு- விலைகொடுத்தால் ௨௯௰

வாங்குவாய்சற்றே யருவுவான்பேய்ப்படுவான்
தூங்குவான்போவான் சுகமறியான்- பூங்குயிலே ௨௯௧

மஞ்சத்திரீயுமொரு மாப்பிளையுமாயிருந்து
மிஞ்சிசாத்திலொரு வேற்றுள்வன் - தஞ்சாறு ௨௯௨

தந்தாலவனச்சமையல் வீட்டிற்பதுக்கிச்
செந்தேனைமெல்லச்செறுமுவென் -வந்தணைந்து ௨௯௩

கொல்லைக்குட்போன குணம்போற்கைகாலலம்பி
மெல்லப்போநம்மையவர் வெல்லுவார் - நல்ல ௨௯௪

உடந்தையாகத்திருந்த வுத்தியோகஸ்தர்க்
கிடைஞ்சல்வந்தாலுன்னையும் வந்தேய்ப்பார் - மடந்தையே ௨௯௫

காணிக்கையானேனுங் கண்டிகையைத்தாதண்டையைத்தா
மாணிக்கமாலையைத்தா வைத்துநான் - காணிக்கை ௨௯௬

தீர்ந்தமறுமாதந் திருப்பித்தருவனென்பார்
ஏந்திழையேநீசற் றிணங்காதே-காந்தாரி ௨௯௭

தாய்க்கிழவிசம்மதித்தாற் சம்மதமென்பாயெனது
வாய்க்குட்பயந்தவர்பின் வாய்ப்பேசார்-நோக்கமாய் ௨௯௮

என்னைக்கலந்தவர்க ளென்றுலுங்கைநிறையப்
பொன்னைக்கொடுத்தாற் புணர்ந்துவிடு- மின்னே ௨௯௯

பறவைமிருகங்கண்முறை பார்க்குதோவேசி
முறைபார்க்கவேபிறைப்பு மோசம்-சிறுபோதே ௩௱

தேடியல்லோவன்பிற் சிலம்பியென்றுமன்னவனைக்
கூடிதிருவாரூர் கொண்டியென்றும்-ஆடவரைத் ௩௱௧

தட்டிப்பெருங்குண்டைத் திம்மியென்றுங்கொண்டையிற்பூ
மட்டுண்டவொற்றியூர் வல்லியென்றும் சிட்டர்தொழும் ௩௱௨

பூவணமாம்பொன்னகரிப் பொன்னனையாளென்றிமுடற்
பூவணமாந்தென்னுறையூர்ப் பொன்னியென்றும்- தேவர்தொழும் ()

சொக்கேசர்கோயிற் றுணைக்கொடியென்றும்புவிக்குள்
மிக்கானபோபடைத்தார் மெல்லியரோ-அக்காலம் ௩௱௪

வண்ணமாற்றுப்பசும்பொன் வாங்கவொருத்திசெய்த
இன்னமாற்றுக்கதையைக் கேட்டிலையோ-பெண்ணணங்கே ௩௱௫

என்றிப்படித்தாய் யியம்பினுள்புத்தியதை
யன்றிப்படித்தாவனேகபுத்தி-அன்றுமுதல் ௩௱௬

மதனபிஷேகத்தின் செய்திகூறல்.

காதன்மதமீறிவருங் காமுகராம்யானைகளைக்
கோதிமுகிரங்குசத்தாற் குத்தியிதம்-ஓதியந்த ௩௱௭
மாரனரண்மனைகளுள் வைத்தணைத்துச்சேர்ந்துரச
சாரக்கரும்பு தனையூட்டி-மூரல்வாய்த் ௩௱௮
தம்பற்கவளந்தனைக் கொடுத்துக்கும்பமுலைக்
கம்பத்துடன்பிடித்துக் கட்டினாள்-அப்பரத்தி ௩௱௯
மூட்டுவிக்கும்யோக முனிவோரையும்பொம்மல்
ஆட்டுவிக்குந்தோளுருப்போ லாக்கினாள் தீட்டியவேல் ௩௱௰
வண்ணக்குடையரசர் மாளிதியாமுங்கீரை
உண்ணக்குறுமுனியை யொப்பாளென்பெண்ணுக்குத் ௩௧௧

அவளது தோழிகளைக்கூறல்.

தோழிமார்கைமருந்துச் சொக்கியென்றுஞ்சாராயத்
தாழியென்றுந்தூதுசவுந்தியென்றும் ஏழுமதி ௩௧௨
லேறியென்றுங்கஞ்சாவூ ரெத்தியென்றுமாயாக்
காறியென்றுங்குண்டுணிவாய்க் கள்ளியென்றும்-மாராட்டக் ௩௧௩
குள்ளியென்றுமாயக் குருவியென்றுமாரீசக்
கள்ளியென்றும்பத்துப்பேர் காமுகரை-மெள்ளப் ௩௧௪
பொருத்துதவாருடலாய்ப் போவாரைப்போடி
நிருத்துவார்தாரரைச் சிச்சிம்பித்தாரந்துவார் ௩௧௫
கல்லிலேநாருரித்துக் கண்பார்க்கினைத்துவிடங்
கல்லுவார்தாமுமொருகைப்பார்ப்பார் மெல்லிநல்லார் ௩௧௬

அவளைவிரும்பிய ஆடவர்செய்திகூறல்.

இவ்வாறுசெய்ய விருந்தியந்தேடுமந்த
மைவார்விழியாண் மதிநுதற்கும் -செவ்விக் ௩௧௭
கொடியிடைக்குநிலவெறித்த குறுநகைக்குமொயில்விளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்ட ப்ரபைபிருத்த-தொடிகளுக்கும் ௩௧௮
அலையுதித்தவமுதெனச்சொ லருமொழிக்கும்விழிக்கும்
மலைகளொக்குமுலைகளுக்கு மனதுவைத்து - வலையிலுந்தன் ௩௧௯
மான்சிக்கிறைப்போல் மருள்வாருந்தூண்டிலிலே
மீன்சிக்கிறைப்போல் மெலிவாரும் - என்சிக்கிக் ௩௨௰
கொண்டோமென்றுள்ளங் கொதிப்பாருங்கூடியின்பங்
கண்டோமென்றுங்களிப்பாரும்- கண்டனைய ௩௨௧
பேச்சுமடந்தைக்குபிடிக்க மனதாசையென்று
பூச்சுமருந்திட்டலையப் போவாரும் - வாச்சுதென்றே ௩௨௨
யார்க்கும்பொடிபோடு மாயிழைதன்வாடமணம்
சேர்க்குப்பொடிபூசிச் செல்வாரும் - ஊர்க்கிணங்கத் ௩௨௩
தத்தனத்தைநயித்து சரித்ததனக்காரியன்னுந்
தந்தனத்துக்குள்ளாய தளர்வாரும்-தந்திரமாய் ௩௨௪

நாடகத்துப்பாங்கு நமக்குநடத்துவிக்கும்
பாடகனையுந்தனது பண்ணிக்கொள்-கூடுதித்திக் ௨௮௮
காரனையுங்கைத்தாளக் காரனையுமேக்காளக்
காரனையுங்கூடியிதங் கட்டாதே - தூறு ௨௮௯
தலையராய்க்கைத்தாழைத் தம்பியராற்பிறற்
கலையராயுன்னழகைக் கண்டு- விலைகொடுத்தால் ௨௯௦
வாங்குவாய்சற்றே யருவுவான்பேய்ப்படுவான்
தூங்குவான்போவான் சுகமறியான்- பூங்குயிலே ௨௯௧
மஞ்சத்திரீயுமொரு மாப்பிளையுமாயிருந்து
மிஞ்சிசாத்திலொரு வேற்றுள்வங் - தஞ்சாறு ௨௯௨
தந்தாலவனச்சமையல் வீட்டிற்பதுக்கிச்
செந்தேனைமெல்லச்செறுமுமென்-வந்தணைந்து ௨௯௩
கொல்லைக்குட்போன குணம்போற்கைகாலலம்பி
மெல்லப்போநம்மையவர் வெல்லுவார் - நல்ல ௨௯௪
உடந்தையாகத்திருந்த வுத்தியோகஸ்தர்க்
கிடைஞ்சல்வந்தாலுன்னையும் வந்தேய்ப்பார் - மடந்தையே ௨௯௫
காணிக்கையானேனுங் கண்டிகைத்தாதண்டைகைத்தா
மாணிக்கமாலைத்தா வைத்துநான் - காணிக்கை ௨௯௬
தீர்ந்தமறுமாதந் திருப்பித்தருவனென்பார்
ஏந்திழையேநீசற் றிணங்காதே-காந்தாரி ௨௯௭
தாய்க்கிழவிசம்மதித்தாற் சம்மதமென்பாயெனது
வாய்க்குட்பயந்தவர்பின் வாய்ப்பேசார்-நோக்கமாய் ௨௯௮
என்னைக்கலந்தவர்க ளென்றுலுங்கைநிறையப்
பொன்னைக்கொடுத்தாற் புணர்ந்துவிடு- மின்னே ௨௯௯
பறவைமிருகங்கண் முறை பார்க்குதோவேசி
முறைபார்க்கவேபிழைப்பு மோசம்-சிறுபோதே ௩௦௦
தேடியல்லோவன்பிற் சிலம்பியென் றுமன்னவனைக்
கூடிருவாரூர் கொண்டியென்றும்-ஆடவரைத்
தட்டிம்பெருங்குண்டைத் திம்மியென்றுங்கொண்டையிற்பூ ௩௦௧
மட்டுண்டவொற்றியூர் வல்லியென்றும் சிட்டர்தொழும் ௩௦௨
பூவணமாம்பொன்னகரிப் பொன்னனையாளென்றிமுடற்
பூவணமாந்தென்னுகாயூர்ப் பொன்னியென்றும்- தேவர்தொழும் ()
சொக்கேசர்கோயிற் றனைக்கொடியென் றும்புவிக்குள்
மிக்கானபோபடைத்தார் மெல்லியரே-அக்காலம் ௩௦௪
வண்ணமாற்றுப்பசும்பொன் வாங்கவொருத்திசெய்த
கின்னமாற்றுக்கதையைக் கேட்டிலையோ-பெண்ணணங்கே ௩௦௫
என்றிப்படித்தாய் யியம்பினாள்புத்தியதை
யன்றிப்படித்தாவனேகபுத்தி-அன்றுமுதல் ௩௦௬

மதனாபிஷேகத்தின் செய்திகூறல்.

காதன்மதயிற்றிலருங் காமுகராம்யானைகளைக்
கோதிமுகிரங்குசத்தார் குத்தியிதம்-ஓதியந்த ௩௱௭
மாரனாண்மனைகருள் வைத்தணைத்துச்சேர்ந்துரச
சாரக்கரும்பு தனையூட்டி-மூரல்வாய்த் ௩௱௮
தம்பற்கவளந்தனைக் கொடுத்துக்கும்பமுலைக்
கம்பத்துடன்பிடித்துக் கட்டினாள்-அப்பரத்தீ ௩௱௯
மூட்டிவிக்கும்யோக முனிவோரையும்பொம்மல்
ஆட்டுவிக்குந்தோளுருப்போ லாக்கினாள் தீட்டியவேல் ௩௱௰
வண்ணக்குடையரசர் மாளிதியாமுற்றீரா
உண்ணக்குறுமுனியை யொப்பாளப்பெண்ணுக்குத் ௩௧௧

அவளது தோழிகளைக்கூறல்.

தோழிமார்கைமருந்துச் சொக்கியென்றுஞ்சாராயத்
தாழியென்றுந்தூதுசவுந்தியென்றும் ஏழுமதி ௩௧௨
லேழியென்றுந்தஞ்சாவூ ரெத்தியென்றுமையாக்
காழியென்றுந்துண்டுணிவாய்க் கள்ளியென்றும்-மாராட்டக் ௩௧௩
குள்ளியென்றுமாயக் குருவியென்றுமாரீசக்
கள்ளியென்றும்பத்துப்பேர் காமுகரை-மெள்ளப் ௩௧௪
பொருத்துதவாருடலாய்ப் போவாரைப்போடி
இருத்துவார்தாராளச் சிச்சிம்பித்தாரந்துவார் ௩௧௫
கல்லிமேலநாருரித்துக் கண்பார்கணைத்துவிடங்
கல்லுவார்தாமுமொருகைப்பார்ப்பார் மெல்லிநல்லார் ௩௧௬

அவளைவிரும்பிய ஆடவர்செய்திகூறல்.

இவ்வாறுசெய்ய விருநிதியந்தேடுமந்த
மைவார்விழியாண் மதிநுதற்கும் -செவ்விக் ௩௧௭
கொடியிடைக்குநிலவெறித்த குறுநகைக்குமொயில்விளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்ட ப்ரபைமிகுந்த-தொடிகளுக்கும் ௩௧௮
அலையுதித்தவமுதெனச்சொ லருமொழிக்குமிருவிழிக்கும்
மலைகளொக்குமுலைகளுக்கு மனதுவைத்து - வலையினுந்தள் ௩௧௯
மான்சிக்கினாற்போல் மருள்வாருந்தூண்டிலிலே
மீன்சிக்கினாற்போல் மெலிவாரும் - என்சிக்கிக் ௩௨௰
கொண்டோமென்றுள்ளங் கொதிப்பாருங்கூடியின்பங்
கண்டோமென்றுங்களிப்பாரும்- கண்டனைய ௩௨௧
பேச்சுமடந்தைக்குப்பிடிக்கு மனதாசையென்று
பூச்சுமருந்திட்டளைபம் போவாரும் - வாச்சுதென்றே ௩௨௨
யார்க்கும்பொடிபோடு மாயிழைதன்வாடமணம்
சோக்குப்பொடிபூசிச் செல்வாரும் - ஊர்க்கிணங்கத் ௩௨௩
தத்தனத்தைதயித்து சரித்தனக்காரிபண்ணுந்
தந்தனத்துக்குள்ளாய தளர்வாரும்-தந்திரமாய் ௩௨௪

மாதைப்பசப்பவென்று வாசன்மட்டும்வந்துநரைப்
பூதத்தைக்கண்டகலப் போவாரும் கோதாயுன் ௩௨௫
கால்பிடிக்கவோவடப்பை கட்டவோசண்பகப்பூ
மேல்பிடிக்கவோர்விசிறிவீசவோ கோலமலர் ௩௨௬
கட்டவோகட்டழகி கண்ணுறங்கப்பொற்குறங்கி
தட்டவோவெள்ளருகிற் சார்வாரும் வெட்டிவேர் ௩௨௭
மண்டுகுழலாள்குளித்த வாடைமஞ்சணீரையள்ளிக்
கொண்டுதலைமேற்றெளித்துக் கொள்வாரும்-அண்டர்பிரான் ௩௨௮
சன்னிதியிற்சந்தடியிற்றள்ளுண்டுவீழ்வார்போற்
பின்னுகுழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன் ௩௨௯
வீட்டிலிருக்கவெளியிலே நின்றுகண்ணை
காட்டித்திரிந்துகரைவாரும்- வீட்டிறப்பை ௩௩௰
அண்டிக்கலவிசெய்யு மாரம்பங்கேட்டுவெட்டித்
துண்டித்தாற்போலத் துடிப்பாரும்-கண்டனையாள் ௩௩௧
சோதிமுகமஞ்சள் துவண்ட துகிறபோர்வையுடன்
வீதிதொறும்போய்ப்பிலிக்கி மீழ்வாரும்-காதளவு ௩௩௨
மைப்பட்ட கண்ணிசப்ர மஞ்சத்தின்மேற்காலைத்
துப்பட்டிக்கொண்டு துடைப்பாரும்-செப்பமுள்ள ௩௩௩
தெப்பத்திருநாளிற் றெப்பக்குளத்துமங்கை
தெப்பத்தேயேறிவருஞ் சீராட்டில் அப்பம் ௩௩௪
வடைசுகியன்றோசை வகைகள்பணியாரம்
கடையிலேகொண்டுமடிகட்டிச் சந்நிதியிற்போய் ௩௩௫
நாரிகையிலேகொடுக்க நாடிவடமோடுமாழ்
வாரியிலேயோடிவருவாரும்-பேராம் ௩௩௬
வசந்தன்றிருநாளில் மண்டபத்தின்மங்கை
இசைந்துநடம்புரியுமெல்லை-கசங்காமல் ௩௩௭
மல்லிகைப்பூசெண்டு மருக்கொண்டுசந்தடியை
மெல்லவிலக்கிவரும் வேளையிலே நல்லபடைக் ௩௩௮
கம்பாலடிப்பட்ட கஸ்தியினொந்துடம்பு
செம்பாலொழுகத் திரிவாரும்-தம்பிரான் ௩௩௯
பல்லக்குக்கூடி பதினறுநாழிகைமேல்
வெல்லவர்குங்கொங்கை வளவுக்குச் செல்லுகையிற் ௩௪௰
குக்கல்வாய்க்காட்டிக் கொடுக்கத்தலைவாரி
கைக்குளகப்பட்டுக் கட்டுண்டு கக்குரத்தம் ௩௪௧
ஏறக்கிட்டொழுக முழங்கையிடிபட்டுநெஞ்சிற்
சீக்கட்டிக்கொண்டுதிரிவாரும் தூக்குமஞ்சத் ௩௪௨
தேயொருவன்வீட்டி லிருக்குமதுகாணாமற்
போயொருவன்வீட்டிற்புகுதவே நியாயமற்ற ௩௪௩

பூசல்விளைத்துப்பொருமையினாலேவாது
பேசிவெளியிற்புறப்பட்டு ரோசமுடன் ௩௪௪
மாறொருத்திக்காய்ப்பொருத வாலியுஞ்சுக்கிரீவனும்போல்
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும்-சாதிரைத்தீ ௩௪௫
வெட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன்
கட்டியங்கள்கூறக் கடுநடையாத்தொட்டிவரும் ௩௪௬
பாதக்குறட்டிற்பவழக்குமிழிலங்க
மாதுமணவரைக்குள்மன்னர்வரும்-போதிலந்த ௩௪௭
வீட்டிற்பரணேறி மேவுந்தொழிலமளி
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும் பாட்டிளஞ்சோன் ௩௪௮
மாங்குயிலைப்போலமருவக்கனவுகண்டு
தூங்கையிலேயிந்திரியஞ்சோர்வாரும்-ஈங்கிவளுக் ௩௪௯
கீயம்வகைகாணு மிரதம்பொன்னுக்குவது
பாயமென்றுமித்ரம் பலகூட்டித்-தீயிற் ௩௫௰
குகையிலேவைத்துக் குனிந்தூதிவாதப்
புகையிலடிபட்டுப்புகைந்து-திகைதெரியா ௩௫௧
மாலைக்கண்ணாகிமதிமயங்கித்தங்கள்தங்கள்
காலைக்கண்ணாக்கிவிழி கண்பாரும்-வாலிபத்தில் ௩௫௨
பூணார்முலையாட்காப்பொன்திருடிக்கையிரண்டும்
காணுகக்கண்டுதளர்வாரும்-வாணுதற்காத் ௩௫௩
தாங்கன்னமிட்டுத் தலையைக்கடைக்காசு
வாங்கென்னவிட்டுலை மாய்ப்பாரும்-தூங்கிவிழும் ௩௫௪
வண்ணனைமயிரும் மாதவிடாய்த்தம்பலமும்
பெண்ணையத்தலையோடும் பின்னையொன்றும்-சுண்ணம்பும் ௩௫௫
பானைபோலேநாத்தே பாவிபடுகைத்தலத்திற்
பூனைபோற்றேண்டிப் புதைப்பாரும்மானனையாள் ௩௫௬
இட்டமருந்தாலிருமல்பிடித்தோயாமற்
குட்டியிட்டநாய்போற்குரைப்பாரும-ஒட்டியபுண் ௩௫௭
என்பவர்க்குநாணி யிரசந்தின்றின்கரும்பு
தின்பவர்க்குநாணித்திருவாரும் பொன்சரிகைச் ௩௫௮
சேலைகொடுத்ததற்குச் சீமாட்டியேன்கொடுத்தாள்
சூலைகொடுத்தாளென்று சொல்வாரும்மூலவரை ௩௫௯
யாப்புக்குச்சத்திரமிட் டாவிக்காக்கக்காக்காய்த்
தோப்பிற்கிடந்துதுடிப்பாரும் மாப்பிளைமார் ௩௬௰
வைத்தாகக்குறியை மங்கையிருகொங்கையிற்கண்
டெய்த்துகெடுமூச செறிவாரும்முத்துமுத்தாய் ௩௬௧
பேசினலும்போதும் பேதைதமைத்தூஷணமா
யேசினலும்போது மென்பாரும்-பாசிழையாள் ௩௬௨

கொர்தலரும்பூவணைமேற் றும்பகளாலீலைசெய
இந்திரன்போற்பக்கத் திருப்பாரும்-ஐந்துபத்து ௧௬௩
மாடுவிற்றோநூறு மறிவிற்றோமேழுமந்தை
ஆடுவிற்றோம்வீட்டி லடிமைவிற்றோம்தேடரிய ௧௬௪
வெண்கலத்தாற்குத்து விளக்குவித்தோங்காணிவிற்றோம்
உண்கலத்தைவிற்றோ முடைமைவிற்றோம்-பெண்செலவுக் ௧௬௫
கென்னத்தைக்கேட்கவந்தா லென்னத்தைநாங்கொடுப்போம
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும் முன்னமிந்த ௧௬௬
மின்னசைகொள்ளாமல்வீணுக்குங்கொண்டோமிச்
சன்னசையென்றுதளர்வாரும்என்னசெய்வோம் ௧௬௭
பங்கைவிற்றுமீந்தோம் பணமினுந்தாருமென்றுள்
எங்கேசுமையெடுப்போ மென்பாரும்-கங்குலுக்கு ௧௬௮
தித்திலோனுகாசு செல்லோனுபோங்குலுநாம்
இத்தனையுந்தோற்றிழந்தோமென்பாரும்-அத்தையர் ௧௬௯
சூளைமகளுநற்சொர்ணமெல்லாங்கைக்கொண்டு
காளையென்றுளென்றுமனைவாரும்-நாளிசே ௧௭௰
பாணடிநாட்டிச்சி பணமுழுந்தினைந்நாங்கள்
ஆண்டியானோமென்றலைவாரும்-ஆண்டியர்தம் ௧௭௧
தொண்டுபோய்வேடம்போய்த் தோகைக்குடையவரைக்
கொண்டுபோய்க்கையிற் கொடுப்பாரும்-கண்டசெட்டு ௧௭௨
மோசமாச்சுக்காண் முதலுக்குப்பல்லாண்டைக்
காசுமில்லையென்று கரைவாரும்-வேசியிவட் ௧௭௩
கீந்தபொருளைவட்டிக் கீந்தோமோநாமிருக்க
வாய்ந்தமச்சிவீடுகட்டி வைத்தோமேகூந்தலிளம் ௧௭௪
பேடைமயில்போல்விடப் பெண்டாட்டிக்கேயுடைமை
சோடினையாப்பூட்டிச்சுகித்தோமோ ஆடுகொண்டு ௧௭௫
விட்டோமோமாடுகொண்டு விட்டோமோதெய்வத்துக்
கிட்டோமோதேகியென்பார்க் கீந்தோமோஅஷ்டதிக்கும் ௧௭௬
நாடிப்புகழ்பெரியநாமகன்பேற்பாமாலை
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ தேடுநிதி ௧௭௭
தன்னைக்கொடுத்துச்சரித்திரத்தைவாங்கினோம்
என்னவியாபாரமென்பாரும் இன்னவகை ௧௭௮
காமுகரெல்லாமயங்கக்காளத்தியையென்மகன்
ஆமொருவனிவ்வூர னதிவையன்-ரேம ௧௭௯
மதுரைக்கொருநாள்போய் மாசித்திருநாளில்
விதிவசத்தாற்கண்டானம் மின்னைமதிநுதலாள் ௧௮௰
மையலுக்குள்வீழ்ந்தான் வடிச்செயநமாமரத்தில்
மெய்யுரிஞ்சப்பொய்க்கவரி வீழ்ந்தாற்போற்கையில் ௧௮௧
இருந்ததெல்லாம்வீட்டி லிருந்ததெல்லாமாஸ்தி
இருந்ததெல்லாந்தோற்று விறந்தாம்மருந்தினும் ௧௮௨

கன்றுண்டார்போலக் கலங்கினேன்வாசலிலே
நன்றுண்டான்றன்னெருங்கத் தம்பிறன்கிள்ளுவதேன் ௩௮௩
ஆதியையனென்னும்பே ரன்றேபோமிப்பால்வி
யாதியையனென்னும்பே ராயினன்பாதி ௩௮௪
யுடலாகிப்பொட்டியபுண் ணுள்ளுருக்கக்கார்க்கும்
தொடலாகச்சிச்சிரங்கு சூலேகொடிய ௩௮௫
அரையாப்புமேகவெட்டை யண்டத்துவாதம்
புரைதாய்பபவுத்ரம்புகைச்சல்-இருமல் ௩௮௬
இளைப்புப்பொடுகு மருந்திட்டநோய்ப்பித்தம்
கனைப்புமாய்ப்போனபூனைபோற் கத்திக்-கிழக்கே ௩௮௭
அடித்தமனையிலருகுதிண்ணைதன்னிற்
படுத்துக்கிடக்கின்றாரும்-படித்தவரே ௩௮௮
இப்படியாய்த்தேடியுண்ணு மேந்திழையாளவாழ்மதுரைக்
கெப்படிபோவீர்வருவ தெப்படிகாண்-செப்புமவ ௩௮௯
தானியையயோவென்று தக்கபத்திபோதிக்க
ஞானியையனைப்பார்த்து நான்விரத்தி யானேன் ௩௯௰

அவதானி மதுரைக்கேகினமைகூறல்

இருப்புத்தூணிற்கரையா னேறுமோபோம்போம்
நெருப்பிற்புழுபோமோநீயென்-கருத்தை ௩௯௧
அறிவீரென்றேநல்லதையமோவென்று
பிறியாமல்வந்தாரென்பின்னேநெறியினிற்போய் ௩௯௨
வையகமேலெய்தியசீர் வைதிகநூன்மெய்யொலிசேர்
மெய்திரைநீர்வையையில்லான்மூழ்கியே-உய்யப் ௩௯௩
படியுமடியவர்கொடியபடிசெயுமிடர்முழுதும்
அடுருமெழுகடலினிடை யாருக்-கிடையோப ௩௯௪
பரத்துக்கேவிருப்புற்றோர் பவத்துக்கோநெருப்பொட்டாம்
அருட்பொற்றாமரைக்குட்போயாடி-உருச்செபிக்கும் ௩௯௫
ஐந்தெழுத்தைச்சிந்தைதனைவைத்திட்டன்பருக்குச்சஞ்சலத்தை
சிந்துசிந்திக்குஞ்சரத்தைத் தெண்டனிட்டுக்கந்தபுஷ்பக் ௩௯௬
கற்பகமெனப்பொலி கடம்பவிறலிற்குலவும்
அற்புதகயற்கண்ணுமை யைத்தொழுது-சிற்பரத்தில் ௩௯௭
நேசர்மனவாசர்பவ நாசர்கயிலாசர்சுக
பின்புறங்காட்டிப் படுப்பாள் பேசாமல்-அன்புடனே ௭௫௬
செய்யாவுபசாரஞ் செய்யப் போனாலுமுழங்
கையாலிடிப்பாள் கடுகடுப்பாய்ப்-பையவே ௭௫௭
அன்னைவந்து தன்னையழைக்கச் செறுமுபக்த
சன்னையறிந் தென்னைவிட்டுத் தானெழுந்துப்-பொன்முடிப்பு ௭௫௮
வாங்குவதுங் கூடுவதுமவன்றன்னருகிற்படுத்துத்
தூங்குவதுமாகத் தொழிலெடுத்தாள்-பாங்கிலிரீற் ௭௫௯

மகனபிஷேகம் தன்னையேசினமைகூறல்

கோப்புடையமாயக்குறுவிடைவிட்டுப்பழைய
மாப்பிள்ளைமார்களமைவரச் சொல்லிப்-பேய்ப்படுவாய் ௭௬௰
அன்னியராயவர்தாலருகிற்போய்நானிருந்தாற்
சன்னைதெரியாதேசவுங்கலே-என்னடா ௭௬௧
போடாவெளியிற்புதுமணைபத்திருந்து
வாடாவெனச்சொலுவாள்மட்டிமிஞ்சி-ஓயங்கள் ௭௬௨
சொலலைத்தொடுத்தாள் தூரத்திடினுபூட்டியசெக
கெல்லைவிட்டுப்போகவெகுதானேனைமெல்ல ௭௬௩

தாய்மகளையேசினமைகூறல்,

மகளையழைத்துமருத்துரூட்டிசொல்வாள்
தகல்பாசிபாப்பான்சகமோ-முகமாயம ௭௬௪
என்னசெய்தாநீயவனுக்கேற்றவுடப்பக்கை
என்னசொன்னாய்பார்தவருக்கேற்குமோ-மின்னே ௭௬௫
கொடுக்கமட்டும்வாங்கிக்கொடாதிருந்தால்விட்டு
மூடிக்கவல்லேலேசிமுறைமை-எடுபபார்கைப் ௭௬௬
பிள்ளையோநீயுமென்னபேய்ப்பிள்ளை மாப்பிள்ளைமார்
கள்ளரைப்போலேதிரியக்காரணமென்மெளவெள்ள ௭௬௭
ஓடங்கடக்கவிட்டாலோடக்காறன்றலையிற்
போடுவதுசொட்டென்பார்பூதலத்தோர்-வாடி ௭௬௮
நிலைநுதலாய்நானுனக்குச்சேர்த்தமருந்துக்கு
மலையுகோர்ந்துவருமே-மூலைவயிற்றைத ௭௬௯
தொட்டதோகன்னஞ்சுரிந்ததோபூத்தானோ
விட்டதோமேனிசிலைத்ததோ-தொட்டவனை ௭௭௰

விட்டுப்பிரிந்தாக்கால்வேறுபிழைப்பில்லையோ
மூஷ்டிவாங்கிப்பயலேமோப்பாச்சு-கெட்டிகெட்டி ௭௭௧
ஊரைவிடப்பற்றென்றுனேர்தாரிவிட்டிறப்புக்
கூரையிலொண்டிக்கேட்டுக்கொண்டேனுன்-மேரைதப்பி ௭௭௨

சண்டையிட்ட மைகூறல்,

கன்றிமாந்தாரைநக்கேட்குமோதெய்வம்
என்றுசொல்லிலக்கேனெடுநேரான்-என்றவுடன் ௭௭௩
ஆங்காரமிட்டாளென்றுஸ்திபெல்லாந்தன்கையால்
வாங்காமல்வாங்கிவிட்டமாமியார்-ஆங்குவரும் ௭௭௪
பேய்மடையார்பெண்ணும்பெருங்குளத்துநீரைத்தன்
வாய்மடையாலேயுறுஞ்சுமாமியார்-நயாரைப் ௭௭௫
புல்வாயைக்கண்டபுலிபோலப்போய்பிடிக்கும்
வல்வாய்கிழகெட்டைமாமியார்-புலனுவிழுங் ௭௭௬
கோப்புளதன்மூப்பைகொடுஇளமைவாங்கமொட்டை
மாப்பிளைமாரைத்தேமாமியார்-கேப்பைக்கும் ௭௭௭
பிஞ்சுமாங்காய்க்கும்பிளவுக்கும்வெற்றிலைக்கும்
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்குமாமியார்-மஞ்சத்தே ௭௭௮
தேறறிதனைமுன்புசேர்ந்தபணக்காரமுறை
மாற்றிமகளுக்கிணங்குமாமியார்-போற்றிவைத்த ௭௭௯
காசழியாமற்றிரியுங்காவிரிப்பற்காரரைத்தான்
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு ௭௮௰
சேயிழையைச்சேர்ந்தவரைத்தேற்றிக்கழுத்தறுக்கும்
ஆயுதம்போலுங்கூர்நாக்கத்தையார்-மெய்யவொரு ௭௮௧
செம்பிலேதண்ணீருஞ்சீலைப்பாயுங்கொடுபோய்
அம்பலத்திலேபடுக்கைமத்தையார்-வெம்புலிபோல் ௭௮௨
தாஷ்டிகரையும்பிடித்துத்தாலகத்திமமாவென்
றூட்டிபணமபறிக்குமத்தையார்மோட்டுப் ௭௮௩
பொலிப்பாட்டைப்போலே புறப்பட்டாளன்று
பொலிப்பாட்டுப்பாடப்புகுந்தாள்வலுத்தவாபோல் ௭௮௪
என்னசொன்னுய்பார்ப்பாநீயின்னமொருகாறசொல்லு
கன்னத்திலேயறைவர்காணேனே-சின்னஞ் ௭௮௫
சிறிக்கியுனக்குநனைறுய்ச்சிக்கிறுளோநரண்
கிறுக்குப்பிடித்தகிழவி-உறுக்கி ௭௮௬
வசமாக்கவல்லோமைகைசெய்தாய்வைப்பு
நிசமாச்சோகுல்லாவிநீயே-பலிலேவிளைக் ௭௮௭

கேதுகொடுத்தாய்நீயித்தனைகாலந்திரிந்தாய்
போதுமினிப்போவென்றாற்போகாயோ-மாதுனக்கு ௭௮௮
தாய்மாமன்பிள்ளையோதாலிகட்டினதேனோ
நீமாத்திரமாங்குநேசமோ-மாமிவீட்டுத் ௭௮௯
தந்தபணசேதமுண்டோசாணவயிற்றுப்பிச்சைக்கு
வந்தவனும்பெண்ணுக்குமாப்பிள்ளையோசெங்கமாக ௭௯௰
கிட்டக்கிடக்கக்கிடைப்பாளேதேவடியாள்
இட்டொருவனைச்சேர்வதெத்தனைநாள்-குட்டிணியும் ௭௯௧
வாணாளைவாங்கிவிடுவெணவாயைமூடின்வயிறு
சாணுமுழமாசவுங்கலே-நாணமற்ற ௭௯௨
மூடாவிதேதமுழக்கம்வெளியிலே
வாடாவொருகாலமதிகேடா-ஞடலாம் ௭௯௩
என்றுபுடவையிறுக்கிளுள்நாணவளைத்
தின்றுவிட்டுக்கசினமானேன்-நன்றியற்ற ௭௯௪
பாவிநீகேளாய்பழங்கதைசெந்தீயிடைப்பட்
டாவிவிடும்பாயமைபயெடுத்தாதரிக்கத்-தாவி ௭௯௫
நளன்காதற்றீண்டியதுநன்மைசெய்யக்கர்மம்
விளைந்தகதையென்னளவுமெய்யேஉளம்பதறிப் ௭௯௬
பேசலாமோநீபுறயவிடலாமோதுடுக்காய்
ஏசலாமேயொடுக்கதில்லையோ-ராசியமேன் ௭௯௭
செட்டிகளுக்கெல்லாந்தெரியாதேநான்கொடுத்த
கட்டிவராகனகணக்குண்டோ-கட்டார் ௭௯௮
அறியாரோவூராரறியாரோவுன்னெஞ்
சறியாதோதோஷமலவோ-மறுபடியுன் ௭௯௯
கிட்டவைத்தவெண்மூடிப்போகேளாய்கிழப்பிணமே
எட்டுத்தலைமுறைமட்டிக்குண்டே-கெட்டபுத்திக் ௮௱
கந்தலேயென்றேன்கவட்டினுழையடா
சந்தையின்மானங்கெட்டாய்சரசமபோமுன்றுன் ௮௱௧
வளவிற்சிலவுடைமைவைத்துவைத்தேனென்றாய்
களவாயப்பயலேகணைநை-கிளாட்டோ ௮௱௨
பின்னுசைவேண்டாம்புறப்பட்டுப்போவென்றாள்
அந்நேரமோர்வகேனுமுதம்-கன்னப் ௮௱௩
பரிசையுந்தன்காலிலேபாப்பாசம்போட்டிப்
பெரியபட்டைநாமமூந்தன்பின்னே-ஒருவனுமாய்க் ௮௱௪
கக்கத்தில்வாளிடுக்காச்சமூச்சென்றுவந்தான்
பக்கத்திலேசவிலைகபாராட்டிவெட்கமறக் ௮௱௫

நாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில்
வாடாவென்றென்னைவரட்டுத்தோய்ப்-பாடி அாகூ
மடியைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன்
தொடையிலடிப்பட்டதவள்தோற்பை-மடிநழுவித் அாஎ
தொங்கியகைவாலமென்று தூக்கிச்சுருட்டியெடுத்
தங்கையினுற்சுக்கத்தடக்கினேன்-மங்கைதனைத் அாஅ
தள்ளினனஞ்சாறுதாக்கினேன்பொக்கைவாய்க்
குள்ளிப்பிடித்தாள்குமியை-உள்ளூரார் அாகூ

சபையேறினமைகூறல்.

கூடிவிலக்கிவிட்டார்கூகூவென்றம்பலத்தில்
ஓடினளநானுமுடன்சென்றேன்-தாடகைபோற் அாய
போயப்பொழுதேபுதுபண்டபத்திலந்தக்
கோயிற்றலைத்தாரைக்கூட்டமிட்டாள்-வாய்விட் அகக
டழுதாள்மகளையருகேசிறுத்தித்
தொழுதாள்மடைமாறிச்சொல்வாள்-பழியஞ்சிப் அகஉ

கிழவிஅறிவிப்புக்கூறல்,

பட்டசேதேவேக்ரப்பட்டரேமீனாட்சி
பட்டரேகாமாட்சிபட்டரே-இஷ்டகர அகங
கிங்கையரேகாரணபதிட்சிதரேசெவ்வந்தி
லிங்கரேயெங்கள்சொக்கலிங்கையரே-சங்கரா அகச
சாரியாரேயனந்தசாஸ்திரியாரேகைவிஸ்
தாரியாரேகோயில்தாணிகரே-ஊருக்குள் அகரு
நியாயமிலேயோநெறியிலேயோபார்ப்பாரம்
பேய்பிடித்ததேயெனதுபெண்பிள்ளையைக்-கோயிலுக்குள் அகசு
அஞ்சாதமாதமாயாடிபாடித்திரியச்
சஞ்சாரஞ்சண்டரோசர்ப்பனையாப்-பஞ்சமாப் அகஎ
பாவியிதைப்பார்ப்பாண்பணயங்கொடுத்தொருகாள்
மேவியிருந்தான்விடிந்தவுடன்-போவானென் அகஅ
றெண்ணினேனென்னமருந்திட்டானோவென்னவகை
பண்ணினனோமதநூல்பாடமோ-பெண்ணணங்கை அககூ
வைப்பென்றுபேரிட்டானவட்டிலிற்கஞ்சிக்குமகள்
உப்பென்றுகேளாதுபாயமிட்டான்-கைப்பிடிக்குக் அஉய
கொண்டானைப்போலக்குடிலமிட்டான்ஆண்பூண்டு
கண்டாலும்பேசாமற்கட்டிட்டான்-ஒண்டொடிக்கு அஉக
வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான்
கோடைச்சுழித்துலைத்துக்சொனளையிட்டான்-மாடமோர் அஉஉ

பட்டிவைக்கிறேன்பலதொம்பைக்கூட்டிற்சம்பாநெல்
கட்டிவைக்கிறேனைபொற்கடாரங்கள்-எட்டேழு ௮௨௩
தூங்கவைக்கிறேனென்றான்சோத்துக்குதூங்கவைத்தாட்
ஏங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான்-வீங்கலிவன் ௮௨௪
இங்குவந்தநாளைமுதலாயெதுகொடுத்தான்றமக்குக்
குங்குமச்சப்பாவரிசிகொள்ளவென்றும்-பொங்கலுக்குப் ௮௨௫
பாசிப்பயறென்றும்பாலென்றுநெய்யென்றும்
தோசைகுளுக்கென்றுஞ்சோமனென்றும்-பூசலுக் ௮௨௬
காணசவ்வாதென்றுமலருபாக்கென்றும்ரச
பாணவர்க்கமென்றும்பகலிராவா-ஏனோ ௮௨௭
பசிக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான்
கொசிக்குங்குடன்போற்கொடுத்தேன்-மடக்கொடியாள் ௮௨௮
பொட்டழியக்காதிற்பொகடியொருசோட்டழிய
ஒட்டழியத்தோற்றேறுடைமையெல்லாம்-பட்டிமகன் ௮௨௯
மோகினிமந்திரமுமூருமறிவான்மதன
னாகமங்களெல்லாமவதானம்-நாகரிகம் ௮௩௰
பொட்டறிவானகதையைப்பூச்சறிவானும்போகக்
கட்டறிவானுமொருநாள்கைவாளத்தட்டறையிற் ௮௩௧
சோதித்தேனசின்னமயிர்த்தோலுநரிக்கொம்புங்கவி
பூதிக்கிழியும்பொடியுமதிலேதுக் ௮௩௨
குருட்டிலைதகாதேசிலதுவுண்டையுநான்கண்டேன்
இருட்டிப்புட்டனென்றுதொகேதேன்-அரைக்காசுத் ௮௩௩
தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பாரென்றிங்கே
கொண்டுவருவானோகொண்டுவரான்-வண்டனிவன் ௮௩௪
மானேர்விழியனங்குமாதவிடாயானுக்கால்
தானேவிடவருவான்தண்ணீரை-மானிடமோ ௮௩௫
அல்லும்பகலுமடைத்துக்கவைத்திறவான்
மெல்லியரைச்சற்றுமவெளியில்விடான்-சொல்லுவதென் ௮௩௬
பத்துவிசையாமபகலுக்கும்ராத்திரிக்கும்
பத்துவிசைக்குமென்றனைபாவைபோல்-உத்தரிக்க ௮௩௭
ஆர்க்குமுடியுமிவனோடுமுன்பிறப்பில்
ஊர்க்குருவியோபெண்ணுடம்பிலே-தீர்க்கவொண்ணு ௮௩௮
நோவொதுக்கவிட்டானுருவயதுப்பயிர்க்கும்
பூவொதுக்கவிட்டான்பொறுபொறென்று-பாவிமகன் ௮௩௯
சொர்ணக்கொடிப்பனென்றுசொன்னதுவுண்டல்லாமல்
ஏன்னகொடுத்தானிதுவரைக்கும்-என்மகட்கு ௮௪௰

மோகங்கொடுத்தான்மூளையறையாப்புக்கொடுத்தான்
மேகங்கொடுத்தான்மெலியவிட்டான் ஆகம ௮௪௧
ஸிரங்காணாள்தம்பியிட்டதீமருந்தால்மாது
குரங்காணாள்குத்திருத்திருமல்கொண்டாள்-மருந்து ௮௪௨
கொடுப்பவராராபுண்ணுக்குங்கூசாமற்கிட்டப்
படுப்பவராரென்மகளைப்பாவிகெடுத்தானே ௮௪௩
தேட்டிவந்துசேருஞ்சிதுவயிற்போக்கறுவான்
வீட்டிற்புகுந்தான்விடுதிபோல்-காட்டமாய்க் ௮௪௪
கூட்டவகைதங்கிருக்கக்குடுமித்தலையைக்கண்
டாட்டவர்களெல்லாமகன்றுவிட்டார்-தேட்டமன் ௮௪௫
நித்திரைகளுப்பொன்னூசித்தங்கொடுத்துவந்த
முத்திரைப்பண்டாரமோமோடிவைத்து-மெத்தக் ௮௪௬
கறுப்பானான்மாலைகட்டிக்கன்னியப்பன்மூற்றும
வெறுப்பானான்மெய்க்காவலெவன்-சிறிக்கிமேல் ௮௪௭
ஆசைவைத்தவாத்தியாரையர்முறைதப்பிதமாய்
பாஷைவைத்துப்போனார்பாகையனார்-காசுபணம் ௮௪௮
மாரியெனச்சொரிந்தமாரியப்பன்சண்டையிட்டு
வீரிவளவிற்போனான்மீள்வானே-தேரேறப் ௮௪௯
பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனக்கிசந்தி
சன்னையிட்டிப்பார்த்தான்சலித்துவிட்டான்பின்னை ௮௫௦
வரத்துயில்லைந்தானுவழக்கானார்சேலை
தாச்சொன்னவின்றைக்குச்சண்டைக்கொருப்பட்டான் ௮௫௧
வைதானென்னையுமயிர்பிடித்தான்செய்யாதுஞ்
செயதானமகளைச்செவியிலே-கையால் ௮௫௨
அடித்தான்விலக்குமவரைமுழங்கையால்
இடித்தான்காத்திருலென்னை-இடுப்பொடிய ௮௫௩
போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன்
கேட்டார்சிரிக்கவல்லோகீர்த்திவைத்தான்-ருட்டிசெய்த ௮௫௪
தேதென்றுநீர்கேட்டாலென்னசொல்வாள்தாய்க்கிழவி
சூதென்பான்வாரிச்சொரிந்தபொருட்-சேதம் ௮௫௫
கணக்குண்டோவென்பான்களரிமெச்சவிந்தத்
துணிக்குண்ணியேகொடுப்பான்சொர்ணம்.பணக்களம் ௮௫௬
மந்தரிட்டுக்கட்டிவளர்த்தகடாக்கையிலே
பாய்ந்தகதைமெய்யாப்பலித்ததே,ஈந்ததில்லை ௮௫௭
தாயுமகளுமொருதாமரையினீரானோம்
பேயமிரங்குமேபெண்ணென்றான்-தூயவரே ௮௫௮

கண்டநடுப்பேசிக்கணக்குப்பார்த்துப்பொருளைத்
தெண்டித்துவாங்கியிந்தச்சேமனைநீர்-கண்டிப்பாய் ௱௫௯

மெட்டுக்கடக்கவெருட்டுமென்றுளென்ற
சட்டித்தலைப்பேயைத்தானமர்த்திப்பட்டன்மார் ௱௬௰

நில்லென்றுநன்வாழ்க்கைநிர்ப்பாக்கியாநீயும்
சொல்லென்றூர்சொல்லத்தொடங்கினேன் கல்லும் ௱௬௧

தன்னறிவிப்புக்கூறல்.

கரையுமேமாயமாற்களளிசொன்னவார்த்தைக்
குரையுமெதிர்வாக்குமுண்டோ-ஒருநாள் ௱௬௨

நடந்தகதைகேளீர்நடுக்காட்டுநீலி
தொடர்ந்தாளோர்செட்டிதனைச்சூதாய்-நடந்தவன்கைப் ௱௬௩

பத்திரத்தாற்றப்பிப்பழயனூரம்பலத்தில்
மொய்த்திருந்தவேளாளர்முன்சென்றான்-சத்துருப்போல் ௱௬௪

ஆலங்காட்டுப்பேயதோவருகுதென்மனையாள்
கோலங்காட்டிப்பகட்டிக்கொண்டென்றாள்-நீலியென்னும் ௱௬௫

கள்ளிமுலைப்பாலுங்கண்ணீருங்கால்கழுதக்
கள்ளியொன்றைப்பிள்ளையாக்கையேந்தி-மெள்ளவந்து ௱௬௬

காட்டிலேகண்டதுண்டோநல்லோரேயென்னைநடுக்
காட்டிலேவிட்டார்கணவனார்-மீட்டுமவர் ௱௬௭

கிட்டிவந்தாரநான்பயந்துகெஞ்சிவந்தேன்- வாளுருவி
வெட்டவந்தார்முன்னாள்விதிப்படியோ-முட்டமுட்டப் ௱௬௮

பேயென்றுரென்னையிந்தப்பிள்ளைகள்ளிக்கொம்பென்றார்
தாயென்றுமில்லைசமரில்லை- தூயவரே ௱௬௯

பிர்விட்டமான்முலைக்கீழ்ப் பிள்ளையைவிட்டாலதுதான்
ஆர்கிட்டப்போமென்றறியலாம்- பாருமென ௱௭௰

விட்டாள்சபையிலதுமெள்ளத்தவிழ்ந்துமடி
தொட்டேறச்செட்டிதுணுக்கென்றாள்-ஒட்டாரம், ௱௭௧

பண்ணுகிறான்செட்டியென்றார்பார்த்தவரெல்லாமவளென்
கண்ணனைநீலியென்றான்கானடுங்கிப்-பெண்ணலது ௱௭௨

சத்துருபேயாகிச்சதிசெய்தால்நாங்களுனக்
கித்தனைப்பெரும்பழிகாணென்றுரைத்துப்'பத்திரத்தை, ௱௭௩

வாங்கிவணிகனையுமார்க்கமிட்டநீலியையும்
பாங்கியொருவீட்டிற்படுக்கவைத்துத்-தூங்குமெனப் ௱௭௪

பூட்டிக்கதவடைத்துப்போயினார்பேய்மதியோர்
வாட்டமுற்றநீலிபழிவாச்சுதென்றே-ஊட்டி ௱௭௫

கடித்தாள்வணிகன்பிடரிதனைக்கையால்
பிடித்தாளிடித்தாளுகிரம்-குடித்தாள்பின் ௱௭௬

நீண்டாள்விளங்கெறிந்தாள்செஞ்சிற்குடர்மாலை
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின் ௮௭௭
கண்டார்வழக்கையெந்தக்கற்பனையாற்சற்பனைகள்
விண்டாலும்பெண்வார்த்தைமெய்யாங்காண்- அண்டினர்க்கு ௮௭௮
ருக்கிணைடுககாட்டிலடித்துப்பரித்தூரிற்
கூக்குரலுமிட்டாற்பின்கூறுவதென்- வாய்க்கலினம் ௮௭௯
பூண்டபரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி
தோண்டுதென்றானினிமேற்சொல்வானேன்-ஆண்டவரே ௮௮௰
அந்தணரோடானிவன்மேலாசைகொண்டேன்மோசமதாய்
இந்தவிதிவருமென்றெண்ணாமல்-முந்தமுந்தக் ௮௮௧
கூனிமருந்தையிட்டுக்கூறுகொண்டாளன்றுமுதல்
மேனியொடுங்கினேன்மெய்ம்மறந்தேன்-நானிவட்கு ௮௮௨
முன்னாட்கடனைமுதலிடுவார்போற்கொடுத்த
பொன்னோபொற்பூந்துகிலோபூஷணமோ-சொன்னசொல், ௮௮௩
லத்தனைக்கும்வீணையழித்ததெல்லாம்யான்கணக்கிட்
டெத்தனையென்றுங்கட்டியம்புவேன்-நித்தநித்தம் ௮௮௪
வல்லார்தனத்திசொந்தவைப்பென்றுபேழையும்
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர்- நல்லவள்போல் ௮௮௫
உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத்
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப் ௮௮௬
பேசினான்சும்மாப்புறப்பட்டுப்போடாவென்
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் ௮௮௭
முந்திமடிபிடித்தாள்முந்தானையைக்கிழித்தாள்
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள்-இந்தநாத் ௮௮௮
தட்டானைவந்தென்றலையிலொருகுட்டு
போட்டாளென்குட்டெல்லாம்போச்சையா- மோட்டு ௮௮௯
வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனால்
விடுவாளோபுண்ணியவான்விட்டான்-இடுதூறாய் ௮௯௰
அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த
இந்தக்குமரியேனென்றாளோ-சந்த்ர ௮௯௧
கல்வாணுதலணங்கேகாதலென்மேலுண்டோ
இலையோவினக்கென்றேனெட்டித்-தலைமேற் ௮௯௨
சளக்கென்றடித்தாள்சதிகாரிவீட்டு
விளக்கிலடித்தாள்பின்வெள்ளி-மூளைக்குமுன்னே ௮௯௩
முந்திபோட்டுமேலேமுக்காலுமாசையென்று
சந்திவீரப்பன்முன்னேதாண்டினாள்-வந்தொருவன் ௮௯௪
முத்தங்கொள்வாய்க்குமுன்னொருவன்தான்கொடுத்த
அத்தம்பலங்கொடுப்பார்க்காணையுண்டோ-வித்தகமே ௮௯௫

மேனியிட்டுநல்லமெழுகுபிள்ளையார்போலே
யானிருந்ததீர்க்கமறியீரோ-கூனியெனக் ௮௯௬
கிட்டமருந்தாலுமிவள்கொடுத்தபுண்ணாலும்
ஓட்டியுலர்ந்தவுடலானேன்-மட்டைக் ௮௯௭
கிறுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-நிறத்தமுழு ௮௯௮
மாணிக்கமொன்றுமணிமுத்தொருசிறங்கை
பேணிவைக்கச்சொல்லிவைத்தேபெண்ணிடத்தில்-ஏணியைவைத் ( )
தேறவிட்டுவாங்கியெனையிக்கோலங்கொண்டகழன்
மாறிகிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனக்குத் ௯௱

பின்னும் தாய்க்கிழவி அறிவிப்புக்கூறல்.

தஞ்சமில்லைநீங்களேதஞ்சமென்றேனந்நேரம்
தொஞ்சமுலைக்காரிதுடிதுடிப்பாய்வஞ்சத் ௯௱௧
திருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி
ஒருமுடிப்புவைத்ததுவுமுண்டோ-மருதங் ௯௱௨
குடியிருக்குதேயழகர்கோயில்பதினெட்டாம்
படியிருக்குதேமுதலைப்பள்ளம்-நடுநியாயம் ௯௱௩
சொல்லுதேசிங்கம்பிடாரிதுடியாமல்
கொல்லுதேதீர்த்துக்கொடுக்கிறோம்-அல்லவென்றால் ௯௱௪
என்னைக்கிடத்தியெனதுமகள்தாண்டமகள்
தன்னைக்கிடத்திநான்தாண்டுகிறேன்-சொன்னதென்ன ௯௱௫
தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்குப்
பிள்ளையோவென்றாள்பெரியோர்முன் கள்ளிசொல்லைக் ௯௱௬

சபையார் விசாரணை கூறல்.

கேட்டுநகைபுரிந்தார்கிட்டயழைத்தென்னையவர்
கூட்டத்துக்குள்ளிருத்திக்கூறுவார்-வாட்டமுற்ற ௯௱௭
மாதவரோவேசிமருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த ௯௱௮

மருந்திட்டதறிந்தமைகூறல்.

முத்தனையாள்நேற்றிரவுமூலைக்குள்வைத்துநிறை
குத்தியர்க்குடித்துக்கூட்டமிட்டிவ்-வைத்தமுதல ௯௱௯
வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத்
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் ௯௱௰
தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன்
விலக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மறக்கலமாய்த் ௯௱௰௧
திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்குண்டுணியாய்
கன்னியங்கேவந்தாள்கலைநெகிழ்ந்துஉண்ணும் ௯௱௰௨

அரக்குவெறியாலவளென்மேல்வீழ்ந்து
குரக்குவெறிபோற்குறியிற்குய்யம்-பொருந்தியெனை ௯௧௩
பண்ணாதகோலமெல்லாம்பண்ணினளார்க்குமொரு
பெண்ணாசையானாற்பிடிக்குமே-அண்ணர்களைச் ௯௧௪
சம்போகஞ்செய்வதுபோற்றன்னாலேயாவதெல்லாம்
அம்பாகுங்கண்ணிபார்த்தாகாமல்-வெம்பியே ௯௧௫
காட்டுமருந்துங்கடைமருந்துமூன்மருந்துங்
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல்-நாட்டம்வர ௯௧௬
வொட்டுமோவென்றாளுடந்தைவாகத்திரிந்த
வட்டமுலையாள்சொல்வகைவகையாற்-சிட்டரோ ௯௧௭
இந்தவிதஞ்சனநிந்தேதென்றுணர்ந்தேகேட்டுநல்ல
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள்-சிந்தைநொந்த ௯௧௮

சபையார் தன்னைத் தேற்றினமை கூறல்.

பூசுரரோவேதப்புனிதரோயம்பலத்தில்
தாசியுடனேறத்தகாதுகாண் வேசியொரு ௯௧௯
செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகதை
ஐயரோநீர்தாமறியீரோ-கையில் ௯௨௰
திரவியத்தைவாங்கியுமைச்சீவனுடன்விட்ட
மரியாதைக்குண்டோவழக்குப்-பெரியாரே ௯௨௧
வேதியராயுள்ளவர்கள்வேசியரைக்கண்டாக்கால்
காதவழிவிலங்கக்காரியங்காண்-ஓதுமறை ௯௨௨
மந்திரநூல்வாயான்மதுவாரசங்கொள்ள
எந்தவசைதுணிவாயெண்ணினீர்-சிந்தைமயல் ௯௨௩
தீர்த்ததாசிக்குத்திரவியமெல்லாங்கொடுத்து
தீர்த்ததாசிக்கடனைத்தீர்த்துவிட்டீர்-கீர்த்தியா ௯௨௪
நாமறியாக்கூத்துநடித்துவிட்டீரும்மளவோ
மாமறையோர்க்கெல்லாம்வசையாச்சே-சேமநிதி ௯௨௫
தன்னைப்பறித்தாள்தரச்சொல்லுமென்றீரப்
பொன்னையினிகேட்கப்போகுமோ-பொன்னைப்போற் ௯௨௬
கூட்டியசெந்தேனெடுத்துக்கொண்டபேர்தம்மையவர்
ஓட்டியவீத்தண்டிப்பதுண்டோகாண்-சூட்டரவம் ௯௨௭
வாய்க்குளகப்பட்டமண்டூகமும்யானை
வாய்க்குள்ளகப்பட்டவான்கரும்பும்-தீக்குள்ளே ௯௨௮
விட்டநறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்க
பட்டகமரில்விட்டபாற்குழம்பும்-கட்டுபுகழ் ௯௨௯
பாங்கினாற்றேடாப்பரமலுத்தர்கைப்பொருளும்
வாங்கினவிப்பொருளும்வாங்கலாம்நாங்கள்சொன்ன ௯௩௰

புத்திவழிநின்றாற்பொருளறிதோநீர்கற்ற
வித்தையிலேசெம்பொன்விளையுமே-எத்தும் ௯௩௧
பரத்தையருக்கீந்ததிலும்பத்தத்தனையாய்
வரத்தக்கயோகம்வருங்காண்-கருத்திலே ௯௩௨
எண்ணியிடையாதிருக்கமூர்க்கேகுமென்று
புண்ணியர்தாந்தன்மனையிற்பொயினாற்-பெண்ணணங்கை ௯௩௩

(தான்கலக்கித்தெளிந்தமை கூறல்.)

பின்னடத்திசெல்லினவள் பின்னழகைப்பாரேனோ
முன்னடத்திச்சென்றாள்முழுப்பாவி-நன்னீர்கட் ௯௩௪
டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின்
ஏகுபறவைகள்போலேகினாள்-மோகமுற்று ௯௩௫
என்னைக்கிழவியிடர்செய்தெனைப்பிரியாக்
கன்னிதனைப்பிரிவுகண்டாளே-இந்நாட்டில் ௯௩௬
மாட்டுமதித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப்
போட்டுப்புறப்பட்டுபோவோமோ-நாட்டமுற்ற ௯௩௭
ஊரெங்கேதோழரெங்கேயுற்றாரெங்கேமனைவி
யரெங்கேயஷ்டாவதானியென்றும்-பேரெங்கே ௯௩௮
நானாவிதமுமெண்ணிநட்டாற்றுக்கோணாயைப்போல்
ஆனோமெனக்கலக்கமாகினேன்-யானே ௯௩௯

(ஆலயஞ்சென்றுதெரிசித்தமை கூறல்.)

எனைத்தேற்றிக்கொண்டுபோயெங்கள்சொக்கலிங்கர்
தனைப்போற்றியென்கவலைசாற்றி-அனுக்கிரகம் ௯௪௰
பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்யான்வலமாகச்
சுற்றிவைரவசுவாமியையும்-முற்றும் ௯௪௧
வணங்கியபொற்கம்பந்தனக்குவடபால்
இணங்குந்திருவாசறகிப்பால்-மணங்கமழ்பூ ௯௪௨
மாலைநிறைத்தமணி வாசன்முன்முகப்பிற்
சேலைநிறைத்ததிருவிளங்கும்-பாலரவி ௯௪௩
காந்திதரநினைத்துக் கட்டளைக்குக்கட்டளையாய்
வாய்ந்ததெல்லாஞ்சொர்ணமயமாகித்-தேய்ந்தமுனை ௯௪௪
மெட்டிலேவேற்சங்கநிதிக்கரசனாபரணப்
பெட்டிதிறந்தபிரகாசம்போற்-சட்டப் ௯௪௫
புழுகுமணமும்பொலிந்தவனைக்கண்டு
தொழுதேனதிசயமுந்தோன்றப்-பழுதில் ௯௪௬
மறையோன்மணியம்வரதையனென்போனவ்
வறைவாசலிலிருந்தானையா-செறிவுடையாம் ௯௪௭

(நாகமகூளேந்த்ரன்கட்டளைக்கண்டமைகூறல்)

ஆருபுயமீதென்றே னடலயன்முதலத்
தாருவுமேருத்தடம்புயமால்-பாராளும் ௬௪௮
யோகமகாராஜ னென்பதூர்வாழ்பெரிய
நாகமகூளேந்த்ரநரபாலன்-தோகைமயில் ௬௪௯
மீனாட்சியம்மைக்கு மிக்கசொக்கலிங்கருக்கும்
தானாட்சியானவுபசாரமோ-மேன்மையபி ௬௫௰
ஷேகமதுமாலை சிறப்புமுதுதீபமுத
லாகநடப்பிக்குமறையென்றான்-மோகநமக் ௬௫௧

(இழந்தபொருளுக்கிரங்கினமைகூறல்)

கிட்டணையுங்கன்னிக் கிளைத்ததெல்லாமிப்படியோர்
கட்டளையாச்செய்துபலன்கண்டோமோ-சிட்டர்தொழும் ௬௫௨
அங்கயற்கணம்மை கழகுதிருவாட்சியொன்று
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கரர்சொக்
கையர்மகிழ்ந்தேற வபிஷேகபண்டாரம் ௬௫௩
செய்ததிருத்தேர்போலச்செய்தோமோ-வைபோகம் ௬௫௪
பொற்பதுமண்டபத்திற் பின்புறமுமுன்புறமும்
பொற்கமுகொண்டமூத்திப்போட்டோமோ-மற்றுமெங்கள் ௬௫௫
மாலழகருக்கு வயிரத்தான்மின்னெறித்தாற்
போலழகாமங்கிபண்ணிப்பூட்டினமோ-சாலையறம் ௬௫௬
செய்தோமோகோதானஞ் செய்தோமோபூதானம்
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோ-துய்யநிதி ௬௫௭
ஆரிடத்தில்வாங்கி யரும்பலனைத்தேடுவோம்
பேர்படைத்தபெஞ்சைப்ரதாபனென்ப-தூர்படைத்த ௬௫௮

(அப்பிரபுவிடத்துக்குச் சொல்லத்துணிந்தமைகூறல்)

ஐயன்பெரியநா கையனிடஞ்சொல்வோமோ
செய்யுமறைவேதியரோ செப்புமென்றேன்-எய்துதிருப் ௬௫௯
பாற்கடலுக்கேகினர் பால்குடியரோவிதற்கு
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு ௬௬௰
பெய்யுமழைக்கு ணையாதபெருமவன்
கையிலேலற்காதவருங்காணோன்-ஐயமின்றிப் ௬௬௧
போமெனவெண்ணீறுதந்து பூசிவிடடார்சந்தனத்தை
யாமெனச்சொக்கேசரடிபணிந்து-மாமேவு ௬௬௨
கூடலழகர்மதன கோபாலர்பூந்துளவ
வேடலருந்தார்வீராகவமால்-மாடேறும் ௬௬௩

நல்லாண்டவர்யார்க்கு மிம்மையிலேநன்மைதரு
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செல்வ ௩௬௪
மடந்தையங்கையற்கண் வாசலற்றசசாலை
கடந்துமறுவீதிகடந்து-கடநதுவரப் ௩௬௫

(மதுரையினின்றுஞ்சென்றமை கூறல்)

பின்னிழுக்குமோர்காலை பெண்ணாசைமாமிசினம்
பின்னிழுக்குமோர்காலைமூன்றுதரம்-பின்னே ௩௬௬
திரும்புவதுமீள்வதுமாய்ச் சீமாட்டியாசைக்
கரும்பைநினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் ௩௬௭
குன்றிருக்குமென்முலைமேற் கூடிக்கலந்தசுகம்
இன்றொருத்தன்பங்காயிருக்குமோ-மன்றலர்ந்தார்ச் ௩௬௮
சுற்றாடநான்படுத்த தூங்குமஞ்சமீதிலொரு
பற்றாய்ப்பயலும்படுப்பானோ-மற்றுமந்தச் ௩௬௯
சந்திமேலமாமியிட்ட சண்டையிலேவந்தவொரு
தொந்திவடுகன்சுகிப்பானோ-முந்திவிளை ௩௭௰
யாடியனுராகம் பாடியுறவாடினன்
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ-மேடையின்மேற் ௩௭௧
கிண்ணமுலைமேற்பதிப்பித்தக் கிள்ளைபார்த்தென்னையுஞ்சற்
றெண்ணிநெடுமூசசெறிவாளோ எண்ணிற் ௩௭௨
படாதபாடித்தனையும் பட்டேனென்பாவம்
இடாதோபிரமனார்க்கென்றே-தடாமல் ௩௭௩
வடக்குமுக்க்கோட்டை வாசல்நடுக்கட்டு
முடக்கில்வருபோதெனக்குமுன்னே-அடக்கமுள்ள ௩௭௪

(ஞானியாரைமறுபடியும்கண்டமைகூறல்,)

மானுபரஞானி யையன்மதுரைக்கன்
றேனேவந்தானென்னெதிராக-நானவனைக் ௩௭௫
காணுமளவிற் களவாண்டவன்போலெண்
சாணுடம்புங்குன்றியொருசாணேனேன்-நாணமாய் ௩௭௬
மாமிதனைக்கண்ட மருமகளபோலானேனைச்
சாமியேனையன்பாய்த்தழுவினல்-நாமறிய ௩௭௭
ஆனைபோலேயிருந்தீ ரையரோயும்முடம்பு
பூனைபோலேயொடுங்கிப்போவானேன்-ஆனவிது ௩௭௮
என்னவகையென்றான்மற் றேதுவகைநீர்முதலே
சொன்னவகைகேளாததோஷவகை-முன்னுயது ௩௭௯
கையைவிட்டுவேசிமகள் கால்பிடிக்கச்சென்றேனன்
மையையிட்டகண்ணளிக்குமாலானேன்-பையவுண்டைக் ௩௮௰
கூட்டியிட்டாள்கைப்பொருளைக் கொள்ளையிட்டாள்கைக்குரங்காய்
ஆட்டியிட்டாளிக்கோலமாக்கிவிட்டாள்-கேட்டார் ௩௮௧

(ஞானியார்தேற்றினமை கூறல்)

நகைப்பாரொன்றேனிதற்கு நாணமேன்யார்க்கும்
வகைதப்பாமோசம்வாராதோ-பகுத்தறிவாம் ௩௮௨
வண்டாடுஞ்செங்காந்தள் வாடையாலேவசைந்து
கொண்டாடுவோர்கைக் குணங்காட்டக்-கண்டெதிர்பின் ௩௮௩
இந்திரன்மெய்யோனிக்க ணீனைஞ்சூரானதுவும்
அந்தணனர்சென்னியிலொன்றற்றதுவும்-சுந்தோப ௩௮௪
சுந்தாமடிந்ததுவுஞ் சுக்ரீவனால்வாலி
முந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-கந்தன் ௩௮௫
மரமானதுமிலங்கை வாளவேந்தன்சிந்து
சிரமானதும்வச்ரதேகத்-துரம்படைத்த ௩௮௬
கீசகனர்மாண்டதுவுங் கேட்டிரிலையோபெண்
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரோ ௩௮௭
கைப்பொருள்போச்சென்று கவலையேன்கல்வியொன்றால்
மெய்ப்பொருளாம்பாவலர்க்குவேளாண்மை-இப்புவியில் ௩௮௮
மன்னனுமாசறக் கற்றோனுஞ்சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத் ௩௮௯
தன்றேசமல்லாற சிறப்பில்லைகற்றோற்குச்
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற ௩௯௰
அவ்வைசொன்னநீதி யறியீரோநீரினிமேல்
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ ௩௯௧
மறைவல்லோனென்னை வழிவிடுத்துப்பார்த்துத்
தறுகின்றனென்மேற்றயவால்-நெறியுடனே ௩௯௨

(ஒன்பதூர்நோக்கிச்சென்றமைகூறல்)

ஐம்பதூர்க்கேகி யலைந்துபலனேதென்றே
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் ௩௯௩

(நற்சகுனங்கண்டமை கூறல்)

காகமிடத்திருந்து கைக்குவலப்புறத்தில்
ஏகக்கருடனிடமாக-யோகபலம் ௩௯௪

(ஏடகங்கண்டமை கூறல்)

இன்றுவந்ததாகுநமக் கென்றுவந்தேனேடகத்திற்
சென்றுவந்தேயந்தச்சிவனனை-அன்றுதெரி ௩௯௫
நாகமலரும் நறுங்கொன்றைப்பூவிதழுந்
தியாகமெனப்பொன்னுமுத்துஞ்சிந்திநிற்பத்-தோகைவிரிச் ௩௯௬
சித்தேனென்பூர்வ செனனதோஷங்களெல்லாம்
இத்தேசங்கண்டதெனவறியேன்-அத்தலத்தில் ௩௯௭
வேம்புகரும்பாமாம் வெண்மணலோநீறுமாம்
தாம்புவிடுநீரமிர்தந்தானுமாம்-தேம்பும் ௩௯௮
வறியேன்மருந்தின் மயக்கமுநோயுந்தீர்ந்
தறிவாளனாக்கிவிட்டதவ்வூர்-நெறியுடனே ௩௯௯

அற்றைநாள்தங்கியருணோதயத்தெழுந்து
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன்- வெற்றிபுரி ௱
கோடுகொண்டமால்யானைக் கூளேந்திரனென்பதுபேர்
நாடுகண்டேனென்கவலை நான்காணேன்-ஆடகவான் ௱க

பின்புநாட்டு வளங்கண்டமைகூறல்.

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகம்வாழைகளும்
கட்டியபூங்காவனமாகக் காண்பிக்க-விட்ட ௱௨
வருக்கைபலாக்கனியை மந்தியிருகைக்கொண்டு
டிருக்குவதுமத்தளக்கோட்டென்ன-உருக்குமிசை ௱௩
வண்டுதித்திகூடவரிக்குயில்கள் பண்பாடக்
கண்டுகிளிகள்கவிபாடத்-தண்டாத ௱௪
மன்றலந்தாரல்லிமலர் வாடைக்காற்றலடிப்பட்
டொன்றோடொன்றுதாளம்போ லொத்திசைப்ப-நின்றுலகில் ௱௫
நீலவன்னத்தோகை நெடுஞ்சிறகைமேல்விரித்துக்
கோலவனிதயர்போற் கூத்தாடச்-சோலைக்குள் ௱௬
ஆங்குநதியாயமலரோடைவாளைவாள்
வாங்கியவீச்சுவளங்காட்டப்-பூங்காவில் ௱௭
வந்துநுழைந்துசெல்லும்வாலரவிகூத்துக்குப்
பந்தம்பிடிக்கும் படிசிறப்பு-முந்த ௱௮
முகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்கும்பாவனையாய் நண்ண - மிகுத்தபொரி ௱௯
தாடுகின்றமஞ்சையெதிரன்னம்பறந்துவந்து
போடுகின்றவெண்டேசு போற்படிய-நீடுலயச் ௱௰
சாலிக்கதிர்குலையுந் தாமரையுமந்தாறும்
சோலைகருண்மன்னாகுழாஞ் சூழ்ந்ததொக்குஞ்-சோலைவளம் ௱௰க
ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன்
வேதன்றொழுங்கோயின் மேட்டிலே-சீதையுடன் ௱௰௨

திம்மராயனைக்கண்டுதெரிசித்தமைகூறல்

மாதவனைக்கண்டேனென் வல்வினையெல்லாமுடனே
ஆதவனைக்கண்டபனி யாகினேன் -பாதம் ௱௰௩
தொழுதுதிம்மராயர் துதித்துனைப்பாடாமல்
பழுதிலேவேசையனைப்பன்னி-முழுவதுமுன் ௱௰௪
மீனவடிவமைந்தபின்னர்காணென்றுநீ
யானசிங்கரூபமிடையாமென்றும்-மேன்மையுடன் ௱௰௫
ஐமக்கிசந்தரூபத்த மங்கையர்கூந்தலென்றும்
கைக்கிசைந்தசங்கைக் கழுத்தென்றும்-இக்கனைத்தும் ௱௰௬

அ

தந்திப்புவனமெல்லாந்தந்தவனைத்தந்தமல
ருந்திதிருமுகத்துக் கொப்பென்றும்-சந்ததமும் தயஎ
வேயடுத்தநின்னிசையைமின்னார்வசனமென்று
நீபடிக்கும்பாவை நிதம்பமென்றும்-வாய்ப்பிதற்றிப் தயஅ
பாடினேனிந்தப்பலன்கண்டேன்சிந்தைமலர்
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி- தயகூ

பதியின்சிறப்புக்கண்டமைகூறல்.

அளகாபுரிக்குமமராபதிக்கும்
வளமாலைவப்புரிக்கு வந்தேன்-பளபளெனும் தஉய
செம்பொனெடுமதிலுந் தேரோடும்வீதிகளும்
கும்பமுடிநிரைத்த கோபுரமும் - அம்பரத்தில் தஉக
ஆற்றுநீரள்ளி யருக்கனுடல்குளிரத்
தூற்றியபொன்மாடத்துகிறகொடியும் - நீற்றொளிசேர் தஉஉ
தன்னிறத்தைப்பொன்னிலத்துத் தந்திக்கிந்நிலத்துப்
பன்னிறத்தைப்பெற்ற பரிசைகளும்-இன்னவழ தஉங
கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையன்கோயிலனும்
கர்த்தனையுங்கண்டு கமலத்தாள்-பத்தியுடன் தஉச

அரண்மனைகண்டுசென்றமைகூறல்.

சேவித்தேன்கோயிலுக்குத் தென்புறத்திற்கற்பகப்பூ
நீவித்தேனூறநெடுமதிலும்- மேவுமுகம் தஉரு
இட்டமணிப்பொற்குடங்களெட்டுவகைச்செந்திருவின்
வட்டமுலைபோலிலங்குமாளிகையும்-தொட்டுக் தஉசு
குழைக்கின்றநல்குரவு கொண்டேனோவாவென்
றழைக்கின்றதுபோனின்றாட்டம்-தழைக்கின்ற தஉஎ
சிங்காரவெள்ளைச் செயலாலுங்கண்டிதுவே
எங்கோனரண்மனையென் றெய்தினேன்- துங்கப் தஉஅ
படையாற்றிருடர்பயத்தாற் கொடையால்
அடையாதவாசலுக்குளானேன்-தடவிகட தஉகூ
காந்துதழற்சிறுகட் காரானைநிற்பவது
ஏந்துசெம்பைகண்டுபகீலென்றுமனம்-சேர்ந்துநான் தஙய
வெல்லவிட்டபூண்டிலையாண் மென்முலைமேலென்மனதைச்
செல்லவிட்டேன்மெளளத் திருப்பினேன்-செல்வமுதல் தஙக
வாசலுக்குண்மன்னர் வருவாரும்போவாரும்
சேஜெயெனுஞ்சந்தடிக்குட்சிக்கினேன்-வீசுகின்ற தஙஉ
பட்டைடக்கம்புக்குப் பயந்தெனைப்பின்பற்றிவந்த
மொட்டைடக்கலியன்முடுக்குண்டான் - கிட்டப்போய் தஙங

அத்தினேன்கொல்லனை யாரென்றாரப்பாநான்
வித்துவானென்றுசொன்னேன் விட்டுவிட்டார்மொய்த்தமணிப் ௲௩௪

கொலுசிறப்புக்கண்டமைகூறல்.

பத்திவிலாசப்பவளக்காற்போதிகைப்பூ
வைத்தகனகமணிமண்டபத்தில்-இத்திகிரி ௲௩௫
வாளலோகம்புரக்குமால்பெரியநாகேந்த்ர
கூளபூபாலன் கொலுவாகத்-தோளிற் ௲௩௬
செயமாதுகூத்தாடத் திங்கண்முகமேயங்
கயமாதுதன்கருணை காட்டக்- கையிலேந்து ௲௩௭
நெய்வடித்தவாள்செவிக்குநேராகநின்றெனக்கூண்
எய்விடத்தையாசொல்லெனக்கேட்பச் - செவ்வியபூஞ் ௲௩௮
சந்த்ரகாவித்தலைப்பாகைமேற்கவிகை
சந்த்ரோதயகாந்தி தான்கேட்ட-அந்தரமும் ௲௩௯
திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள் கீர்த்தியைப்போல்
மிக்கிரட்டைப்பாவாமை வீசிநிற்கச் - சொக்கர் ௲௪௰
அவிரொளிரத்னங்கியபடுத்திருபால்வீசும்
கவரியுபயநிறக் காட்டக்- கவலைபடும் ௲௪௧
சொற்காட்டுமொன்னர் தொழுதுவந்துகொஞ்சப்
பற்காட்டுஞ்சென்னி பதித்தமணி-முற்காட்டு ௲௪௨
சாமித்துரோகரைப்போற் றண்டைமுகப்பில்வெற்றிச்
சோமத்தலைபோலச் சோதிவிட-வீமரண ௲௪௩
தீரதுரைமக்கள் செயமந்திரிமாரு
வீரதளகர்த்தர்களும் வேந்தர்களும்-பார்மதிக்கும் ௲௪௪
ஸ்தானுபதிகளும்ப்ரசண்டநியோகிகளும்
நாநாகனுதிரிந்த காவலரும்-கோன்முறைமைக் ௲௪௫
இந்தவகைக்கிந்தவகை யின்பந்தருவதென்ன
வந்துபரராசர் மனுகேட்பச்-செந்திருவாழ் ௲௪௬
துய்யவதனசந்த்ரசோபைநறுந்தெள்ளமுதை
தையநல்லார்செங்கட் சகோரமுண்ணக்-கைகுவித்து ௲௪௭
வாரிட்டரானுவரிசையாய்நிற்கவெதிர்
காரிட்டயானைநின்று காதாட்டத்-தாரிட்டும் ௲௪௮
பொன்னின்முகப்பூண்டு பூட்டிநிறைத்தடல்லி
வன்னப்பரிகளைத்துவாவிநிற்க- எந்நேரம் ௲௪௯
கூடுஞ்சனுவூழியக்காரர் கோடிசெய்த
தேடுங்கனசேருவைக்காரர் - சோடிட்டுத் ௲௫௰
தத்தரமாய்க்காலிலிட்ட தண்டைகளும்கேடயமும்
கத்தியுமாய்வந்துநின்றுகைகுவித்துச்-சித்தம்வரச் ௲௫௧
சிங்களத்தைவிட்டுச் சிறைபிடிக்கவோநாங்கள்
வங்களத்திலேகலகம் வைக்கவோ-பங்கமில்லா ௲௫௨

வல்லத்துகோட்டையைப்போய் வாங்கவோவாங்காதோ
கொல்லத்தைகொள்ளையிட்டுக் கொள்ளமோ- மெல்லப்போ ௲௫௩
சொல்லையாவென்னத் துடிமடியங்காரர்பணம்
செல்லும்வரவுஞ்செவிக்கேற்ற-நெல்லுநிதி ௲௫௪
ஆயக்கமுஞ்செலவு மாதாயமுங்கழிவும்
வாயிற்கணக்கர்வந்து வாசிக்கா- தேயத்துக் ௲௫௫
கோவோலைவாசகத்தை கூறுவாருமெழுதி
ஏவோலைகொப்பமிடச்சொல்லத்-தாவித் ௲௫௬
தகருந்தகருந் தலையுந்தலையுந்
தகருந்தகருமெனத் தாக்க-விகடநட ௲௫௭
மல்லராய்முற்பகையு மல்லராய்க்கட்டிவிழு
மல்லராய்கைகுவித்து வாங்கிநிற்ப - வெல்லக் ௲௫௮
குறும்புள்ளாயங்கைக் குறும்புள்ளாக்கோபக்
குறும்புள்ளாய்ப்பாய்ந்து குதிகொள்ளப்- பறங்கிகளும் ௲௫௯
சோனகருந்தந்த துரிதவராகனிது
சீனர்வரவிட்ட சிவிகையிது - யானைகட்டி ௲௬௰
மீண்டுகொண்டமைசூர்மேல் வேட்டையோம்நம்முடைய
தண்டுகொண்டுவந்த தனங்களிது-மண்டலிகர்
௲௬௧
இட்டதிறைகளிதுபாரக்கென்றுசொல்லிக்
கட்டியர்கொண்டாடக் கனபேரி-கொட்டரண ௲௬௨
மல்லாரிகொட்டவகோபிலமால்கோயிலா
ரெல்லாருமோர்பா லினிதிருப்ப-நல்லமிர்த ௲௬௩
போசனுங்கூளபூபாலன்சத்திரத்து
மாசனமுமன்றுடி மங்கலத்து-மாசனமும் ௲௬௪
அத்தலக்குண்டுமாசனமுமாற்றாராம்
அத்தலத்தில்வைதிகநூ லந்தணரும்-வித்வசனர் ௲௬௫
பட்சமுமுமெங்கோன் பவிசுப்பலன்களுமென்
றக்ஷயமாமென்றக்ஷதைவழங்க-ரட்சகனும் ௲௬௬
கோரசிங்கரூபவுக்ர கோதண்டபாணியைப்போல்
வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தான்-சூரியன்முன் ௲௬௭
பங்கயம்போலானேன்பாயனெனச்சென்றெதிரே
செங்கைதனையேந்திச் செயமென்றேன் -இங்கே ௲௬௮
இருமென்றென்னையனிடங் காட்டப்பெற்றேன்
அருகிலிருந்தேன் மகிழ்ச்சியானேன் - கருணைபுரிந் ௲௬௯
தென்மேல்விழிவைத்தா னெங்கோன்குறிப்பறிந்து
பொன்மேவும்பெஞ்சை புரந்தரா-மன்ன ௲௭௰

நிகளங்காவல்லாநிலைக்கோட்டைராயா
அகளங்காவாளுக்கபிமா-நனைகமுகப்பித் தளக
தாபாகலிகோபாசதுராவிருதபண்டு
பாபாவலக்கவசம்பாக்யகுல-தீபா தளஉ
சுமுகப்ரமுகலளிதசுகுதகுணரளயனைய
சமுகநகைமுககமலதளநயனு-அமிர்தரச தளங
மதுரவித்வவசனமிாதமதமெழுதுபுயசைல
சதுரதடகடகரடசமரகரி-உதயகெரு தளச
விதநடனபரிகுலவிகடமிடுமகுடமுடி
அதிரவடிவருடுசரணடலபய-அதுலகுல தளரு
சந்திரசிந்துரசந்தனகுங்கும
மந்திரகொங்கைமடைந்தையர்-சுந்தர தளசா
கல்விப்பெருங்கடலே கற்பகக்கன்றேகமலச்
செல்விக்குவாய்த்ததிரவியமே-வெல்லுமதக் தளஎ
கூடைகோட்டியானைக்குருகாளெனுங்காட்டு
மான்கோட்டஞ்சாடும் வரிப்புலியேமீன்கூட்டம் தளஅ
பாதிக்குறவநிந்தபன்றிமலைச்சாரலிலே
ஆதிக்கஞ்செய்திருக்கு மாளியே-ஒருபகை தளகூ
வீரமண்டலீகனெனும்வேழங்களைவிழுங்கும்
பாரகண்டபேரகண்டபட்சயே-சேரலாய் தஅய
அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராங்
தண்டிற்கிழக்குஞ்சாபமே-திண்டிறல்வேற் தஅக
போசேந்த்ரசக்ர புவனேந்த்ரராஜாதி
ராசேந்த்ரதீனசனரட்சிகா-வீசுதுளை தஅஉ
ஆற்றிலோாலுமனுதினமும் பொன்னூறும்
ஊற்றிலேயாருமுடையானே-ஏற்றமுள்ள தஅங
பத்தூரல்வென்றுப்படைக்குந்தலையூராம்
நத்தூருமொன்பதூர்நாயகனே-மொய்த்தகடல் தஅச
ஒப்பத்திரண்டுதளமுள்ளசதுருடியங்கள்
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் தஅரு
அண்டலரைவெல்லுமறுபத்துநாலுமன்னர்
கண்டசெய்துரங்காணகங்கண-னேண்மீடுகொண்டு தஅசா
சண்டைக்குடில்வித்தளம்வந்துதாளுலும்
கண்டுமலையேறுதகண்டனே-தண்டஜய தஅஎ
தண்டனேகாரியவுத்தண்டனேசூதாலே
தண்டனேவீரியகோதண்டனே-தண்டவலத் தஅஅ
தாரனேசற்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத தஅகூ

சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங்
காமனேவிற்கரும்புக்காமனே-நாமகள்சேர் தகூய

பெஞ்சைநகர்சிந்தமனபேறேசாற்கால
மஞ்சைநிகழுந்தியாகவள்ளலே-அஞ்சித் தகூக

தொழுதுங்கவேந்தருக்குத்துள்ளுசீட்டொப்பம்
எழுதும்பெரியநாகேந்த்ரா-எளியோர் தகூஉ

கரங்கள்விரித்தேறக்கண்டதுவாபோல்
இரங்கும்பெரியநாகேந்த்ரா-வரங்கள் தகூங

செருக்குமதருபம்போற்சிங்காதனத்தில்
இருக்கும்பெரியநாகேந்த்ரா-பருக்கும் தகூச

மழைக்கும்பகழும்மதயானைவீரிட்
டழைக்கும்பெரியநாகையா-தழைத்தபுகழ்க் தகூரு

கூளமகிபன்குமராதுரைச்சிந்தமனும்
வாளபயசோதரவசிரனே-நீள்சகல தகூசா

தன்வித்தை அரங்கேற்றினமை கூறல்.

சம்பனுவென்றுதமிழ்ப்பாடினேன்தமிழிற்
கம்பனுமென்றூர்கவிராசர்-சொம்புபெறக் தகூஎ

கட்டாகநூறுகவிசொன்னேனங்கேயென்
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷடாங்க தகூஅ

யோகக்காவித்துகிலோருள்ளமகிழ்ந்தமிர்த
பாதமெனச்சொல்லப்பண்ணினேன்-தியாகநிதி தகூகூ

என்னும்பெரியநாகேந்த்ரனகளங்க
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் தா

கவிச்சக்ரவர்த்தியென்றுன்காவலாநீயே
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குநல்ல தாக

வெகுமதி செய்தமை கூறல்.

முத்துக்கடுக்கனொடு முன்கைதனக்கிணங்கும்
அஸ்தகடகம்ரத்நஆரமணிக்-கொத்துச் தாஉ

சரப்பணிதும்பிப்பதக்கஞ் சாலுவைபொற்காந்தி
பரப்பிவிடுபொற்சரிகைப்பாகை-தரித்தருள்வீ தாங

தாம்பரங்களீந்தான்தருப்போலவனெனக்கு
காம்பரிசிவீயமற்குமுன்னே-மேற்படும்போ தாச

திட்டுபுகழ்க்கல்லூர்வாழ்திப்பணமேவளென்தலைக்குச்
சூட்டவொருமுத்துத் துராவீந்தான்-தாஷ்டிகோத் தாரு

தண்டெனுங்கூளேந்த்ரன் தம்பியாஞ்சிந்தமனோர்
கண்டசரமீந்தான் கழுத்துக்குக்-கொண்டலெனும் தாசா

முத்துராயன்கொடுத்தான் முன்னணிசுமாக்கியணன்
பத்துவராகன்பெறவோர் பாகீந்தான்-சிக்கசனும் தாஎ

சங்கப்பன்கொலுசு நல்கினான்மோதிரமென்
செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவேள்-தங்கவளை ௲௮
ராசகோபாலையனல்கினான்சீர்கொள்முத்துப்
போசனொருமுத்துவடம்பூட்டினான்-பேசுபுகழ்ச் ௲௯
சாந்தபூபன்கொடுத்தான்சாலுவைநன்னாகரத்நம்
ஈந்தான்கொடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் ௲௰
நல்லவனரச்சு நடைப்பரியீந்தானுலகம்
சொல்லும்பணிக்காயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத்
தையலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி ௲௰௧
துய்யவெள்ளிக்குண்டுசொக்காய்தந்தான்பொய்யுரையாக் ௲௰௨
கூளக்கணக்கன்மணிகுண்டலந்தானிரண்டு
தோளிற்றானுக்களவாய்த்தூக்கவே வேளைக் ௲௰௩
குதவியதம்பான்கொடுத்தா னென்பதுபொன்பட்டுச்
சதுரன்கலாசதயாளு-புதுவயிரத் ௲௰௪
தண்டோட்டிதந்தான்சவாதுப்பணிதந்தான்
கொண்டசொக்கலிங்கன்கொடுத்தானோர்-முண்டாசு ௲௰௫
சட்டமிட்டிசொக்கலிங்கன்தந்தான்கணையாழி
கட்டழகன்பரசிபந்துகட்டினான்-பட்டை ௲௰௬
யரைஞாண்தந்தார்பொன்னரைசட்டைதந்தான்
வரிசையாம்ராமமகிபன்-முருகுமுத்து ௲௰௭
சின்னானுதவினான்தீரன்வடகூவன்
பொன்னால்விருதுதண்டைபூட்டினான்-மின்னெறிக்குந் ௲௰௮
தாயிரத்திராமனன்றுதந்தான்திருமலையான்
நேயத்தாற்பொற்பூநிசாறுதந்தான்- தூயதுணைக் ௲௰௯
காமநீந்தானத்கறவையைந்துகண்டையிட்ட
சோமனீந்தானரைக்குச்சோபாகச்சோமனெனும் ௲௨௰
பசலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடன்
பாலுக்குக்காராம்பசுதந்தான்-மால்குழைத்து ௲௨௰௧
வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாய்மே...
போலக்கொடுத்தோட்டிப்போவென்றால்-சீலிபு ௲௨௰௨
பாலன்கொடுத்தானோர்பச்சைவடஞ்சோடங்கி
நாலுமடிப்புரொக்கநல்கினான்-சீலனெனும் ௲௨௰௩
நல்லமதன்கொடுத்தா னல்லகுதிரைமறி
கல்விதெரிசிக்கனென்கண்குளிரக்-கொல்லத்துப் ௲௨௰௪
பச்சைக்கபாய்தந்தான்பாரியொத்தசாமியங்கே
மெசசுயெனக்கிரண்டுமேதிதந்தான்உச்சிதமாக் ௲௨௰௫
கூதலுக்குப்போர்வைதந்தான்கொண்டபூபன்னுலக
நாதன்சகலாத்துநல்கினான்-மாதங்கக் ௲௨௰௬
கட்டிக்கொடுத்தனனுகக்கண்டவன்குருவா
ரொட்டிகொடுத்தானதற்குரொட்டிப்பு-தட்டிவிட்டு ௲௨௰௭

நாழிமுத்தைமுத்தையவேணல்கவரதப்பனொரு
தாழிவிரலைப்போட்டான்சமுகத்தில்-வாழியென ௲௧௨௮
நகையவீந்தானங்கோரத்நகண்டிராமயனுந்
ந்துகள்கொடுத்தான்பொன்தொண்ணூறு-திங்கண்முக ௲௧௨௯
வீரப்பெருமாள்விரலுக்குவச்சிரக்கல்
சேருற்றபொன்மோதிரந்தந்தான்-கோர ௲௧௩௰
அனுமத்துவசாருங்கருட்டாலர்
கனவிருதுசிங்கடாற்காரர்-எனவாழ ௲௧௩௧
எல்லாருஞ்செம்போனிறைந்தாரையானனஞ்சூழ்
நல்லாசனம்பெரியநாகேந்த்ரன்-செல்வத் ௲௧௩௨
துரையெனககங்காட்டான்சொர்ணாபிஷேகம்
கரையெனத்தந்தானேமதமா-தளரக் ௲௧௩௩
கவிகைதந்தான்வெள்ளைக் கரிதந்தான்செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்த-ரவிபோல் ௲௧௩௪
இருட்டகற்றுந்தீவட்டியீந்தான்மதிபோற்
சுருட்டிதந்தான்தந்தான்றுவசம் பெருத்தசில ௲௧௩௫
ஊர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
ஏர்தந்தான்வாவுக்கிடந்தந்தான் ஆர்தந்தார் ௲௧௩௬
இந்தத்தியாகமிவனைப்போல்வாவியர
விந்தத்தியாகவந்தமெல்லியலேஇந்தவிசம் ௲௧௩௭

விறலியைத் தூதுவிடுத்தமை கூறியது.

என்செய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன்
பெணசெய்தவமும்மூர்க்குபோயினிநிமின்செய்த ௲௧௩௮
சிற்றிடையாகியவென்தேவியாரைக்கண்டு
நற்றிறஞ்சேர்வீணையம்பாடி - மற்றவளுக் ௲௧௩௯
கென்குறையமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப்
பொன்குறையுங்கேட்டுடல்போக்கியோநன்குறுமென் ௲௧௪௰
ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு
வேசைமனக்கேகுவரோவிட்டெனவாலோசனையும் ௲௧௪௪
கொள்ளாமலென்பதங்கூறிமுன்னைக்குற்றநினைந்
தெள்ளாமற்கற்பினியல்போதி-உள்ளாளப் ௲௧௪௨
பண்பாடியுட்கமாபாணம்படச்செய்து
நண்பாடியென்னவரவைநான்கேட்டுக்-கண்பார்க்க ௲௧௪௩
ஓசையாமுன்போனுறவாக்கச்செல்லவழி
தோகைவிரலிநீ தூது, ௲௧௪௪

ஆக கண்ணிகள்-௲௧௪௪

விறலிவிடு தூது - முற்றிற்று.